www.padippakam.com

புலிகள் கப்பல் வழக்கு: அம்பலமானது இந்திய அரசின் அடாவடி

15 பிப்ரவரி 96 □ ரூ. 3.50

# புதிய ஜனநாயகம்

## 'தேசிய'ப் பன்றிகளின் ஹவாலா ஒற்றுமை




படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தாழ்த்தப்பட்டோர் கிள்ளுக்கீரைகளா?

மகாராஷ்டிரா மாநிலத்தில் பா.ஜ.க.-சிவசேனா கூட்டணி அரசு, தீண்டாமை தடுப்புச் சட்டத்தின் கீழ் மேல்சாதி வெறியர்கள் மீது பதிவு செய்யப்பட்ட 82 வழக்குகளைத் திரும்ப பெற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளது. ''இவ்வழக்குகள் யாவும், தாழ்த்தப்பட்டவர்களை மேல்சாதியினர் வெறுமனே வாய் வார்த்தைகளால் திட்டியதற்காகத் தொடுக்கப்பட்டவை; இச் சட்டம் 'தடா' வைப் போலத் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது'' எனக் கூறித் தங்களது மேல் சாதி பற்றுக்கு நியாயம் கற்பித்துள்ளனர் இம்மத வெறி பாசிஸ்டுகள்.

## 'மார்க்சிஸ்டு'கள் வெட்கித் தலை குனிய வேண்டாமா?

மேற்கு வங்கத்தில் அமைந்துள்ள டார்ஜிலிங், தூவார்ஸ், திகா, பக்காலி, டயமண்ட் ஹார்பர் போன்ற மலைவாசஸ்தல சுற்றுலாப் பகுதிகளில் பூப்படையாத இளஞ் சிறுமிகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. விடுதி அதிபர்கள் கிரிமினல் கும்பல்களுக்குப் பணத்தைக் கொடுத்து, மேற்கு வங்கத்தின் வடக்கு மற்றும் தென் பகுதிகளில் இருந்தும், நேபாளம், வங்காள தேசத்தில் இருந்தும் வறுமையால் வாடும் குடும்பங்களைச் சேர்ந்த சிறுமிகளை ஏமாற்றிக் கடத்தி வந்து விபச்சாரத்தில் தள்ளி விடுகின்றனர். ''கடந்த ஓராண்டில் மட்டும் 5000 சிறுமிகள் கடத்தி வரப்பட்டிருக்கலாம்'' எனப் போலீசு அதிகாரிகள் கூறுகின்றனர்.

## சீரழிவிற்கு எதிராகக் கோவா மக்கள்

சென்ற ஆண்டின் இறுதி நாளான டிசம்பர் 31-ந் தேதி நள்ளிரவில், கோவா மாநிலத்திலுள்ள அஞ்ஜுனா எனும் கடற்கரைப் பகுதியின் வெட்ட வெளியில் 2000 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் போதை மருந்தை உண்டுவிட்டு, களி வெறி நடனமாடினர். அன்று அவ்வூரின் சுற்றுப் பகுதிகளில் வீசிய காற்றில் கூட போதை மருந்தின் நெடி கலந்திருந்தது. ''அமில விருந்து'' என்று அழைக்கப்படும் இச்சீரழிவு நடனக் கும்மாளங்கள், கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பிறப்பையொட்டி கோவாவின் கடற்கரைப் பகுதிகளில் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு போதை மருந்தை அதிகம் உண்டதன் காரணமாக ஐந்து வெளிநாட்டவர்கள் இறந்து போயினர். ''போதை மருந்துக் கடத்தல் கும்பல்தான் இவ்விருந்துகளால் பயனடைகிறது. எனவே அரசு இக்கும்மாளங்களைத் தடை செய்ய'' வேண்டும் எனக் கோரி அம்மாநில மக்கள் கோவா விழிப்புணர்வு படை எனும் அமைப்பின்கீழ் திரண்டு போராடத் தொடங்கியுள்ளனர்.

## ஈயத்தைப் பார்த்து இளிக்கும் பித்தளைகள்

மத்தியப் பிரதேச மாநிலத்தின் பாரதீய ஜனதா கட்சியின் தலைவராக இருப்பவர் லெட்சுமி நாராயண் பாண்டே. சமீபத்தில் போலீசார் இவரது வீட்டைச் சோதனையிட்டு, அங்கு கள்ளத்தனமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 30 கிலோ அபினி போதைப் பொருளைக் கைப்பற்றினர். இது தொடர்பாக, பாண்டேயின் உடன்பிறந்தாரின் மகனின் மீது வழக்கும் தொடரப்பட்டது. ஆனாலும் பாண்டே, தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வழக்கைக் குப்பைக் கூடைக்கு அனுப்பி விட்டார். காங்கிரசின் மாற்று பா.ஜ.க.வின் முக இலட்சணம் இதுதான்!

## நீலப்படக் கும்பல் கைது

ஒரு வருடத்திற்கு முன்பாக மகாராஷ்டிரா மாநிலம் ஜலகான் நகரில் நடந்தைப் போல, அம்மாநிலத்தின் நாசிக் மாவட்டத்தில் மாலிகான் எனும் ஊரில், இளம் பெண்களை வேலை தருவதாக விடுதிக்குக் கூட்டிச் சென்று, கற்பழித்து, பின் நிர்வாணப் புகைப் படங்கள் எடுத்து மிரட்டி வந்த கிரிமினல் கும்பலைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனாலும் இக்கும்பலுக்கு உறுதுணையாக இருந்த மகாராஜா விடுதி உரிமையாளரும், முன்னாள் மாலிகான் நகரசபைத் தலைவருமான காங்கிரசு கட்சியைச் சேர்ந்த நூர் அலி நஜிர் அலியின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 'தேசிய' வெறிக்கு கருத்துரிமை பலிகடா

தனியார் தொலைக்காட்சி நிறுவனமான ''ஜீ-டி.வி'' சமீபத்தில் ஆசாத் காஷ்மீரின் பிரதமரான சர்தார் அப்துல் கயாமின் பேட்டியை ஒளிபரப்பியது. இதையடுத்து, ரவி திவேதி என்பவன் தலைமையில் பத்து சிவசேனா குண்டர்கள் அத் தொலைக்காட்சி நிறுவனத்தின் பம்பாய் அலுவலகத்தினுள் புகுந்து கணிப்பொறி, தொலைபேசி போன்ற விலை உயர்ந்த பொருட்களை உடைத்து சேதப்படுத்தியதோடு, ஒரு பெண் ஊழியரிடம் தகாத முறையில் நடந்து கொண்டனர். ''இத்தாக்குதல் மற்றவர்களுக்கு ஒரு பாடம்'' என்ற மிரட்டல் கடிதத்தையும் இக்கும்பல் வீசிச் சென்றது. இதற்குச் சில மாதங்களுக்கு முன்பு, ''அவுட்லுக்'' என்ற ஆங்கில வார இதழ், ''பெரும்பான்மையான காஷ்மீரிகள் சுதந்திரத்தை விரும்புகிறார்கள்'' என்ற கருத்தை வெளியிட்டதற்காக, பம்பாய் நகரெங்கும் அப்பத்திரிகையினை வாங்கிக் கொளுத்தியது தேசிய வெறி பிடித்த இக்கும்பல்.





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 11

**இதழ்: 5-6**

16 ஜன.'96 - 15 பிப். '96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


# பாப்பாத்தி சமையலில் கருவாடு ''தேசிய'' அரசியலில் ஹவாலா


அடுத்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களுக்கு இன்னும் ஆறு மாதங்கள்கூட இல்லை. எந்தவொரு அரசியல் கட்சியின் மீதோ, கூட்டணியின் மீதோ இந்திய மக்கள் நம்பிக்கை வைக்கத் தயாரில்லை. எல்லா அரசியல் கட்சிகளின் மீதும், குறிப்பாக மத்தியிலோ மாநிலங்களிலோ ஆட்சியில் உள்ளவை அனைத்தின் மீதும் அடாத வெறுப்பும் அவநம்பிக்கையும் கொண்டுள்ளனர். நாடு முழுவதும் நரசிம்மராவ் தலைமையில் காங்கிரசு எதிர்ப்பு அலை வீசுகிறது. ஐந்தாண்டுகள் ஆட்சியில் ஒட்டிக் கொண்டிருந்ததையே வைத்து ''நிலையான ஆட்சி'' என்ற சாதனையை மக்கள் ஏற்க மாட்டார்கள்; அதைவிடப் பெரிய 'சாதனை'களான வரலாறு காணா இலஞ்ச - ஊழல், ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டை மறு அடகு வைக்கும் தாராளமய, தனியார்மயமாக்கும் கொள்கைகளால் கடுமையான வெறுப்புக்குள்ளாகிவிட்டனர்.

ஆகவே, தனக்கும் தனது கட்சிக்கும் எதிரான எதிர்ப்பு அலையை மாற்றுவதற்கு காஷ்மீர் தேர்தல், பரிசோதனை அணுகுண்டு வெடிப்பு என்று ஏதாவது சாகசம் புரிய விருந்த சகுனி நரசிம்மராவ், பிரபலமான ''ஜெயின் - ஹவாலா மோசடி'' வழக்கு என்னும் குண்டுவீசி, திடீரென்று எதிர்த்தரப்பு அரசியல் தலைவர்கள் அனைவரையும் திகைக்க வைத்துவிட்டார். சர்க்கரை இறக்குமதி ஊழல், பங்குச் சந்தை மோசடி, பொதுத்துறை பங்கு விற்பனை ஊழல், தொலைபேசித் துறை ஒப்பந்த ஊழல் போன்ற ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் அளவுக்கு மேலான ஊழல் சாக்கடையில் மூழ்கித் திளைக்கும் ''ஊழல் பன்றி'' ஒன்று, திடீரென்று ஞானோதயம் பெற்றுப் புனிதரைப் போல மாறித் தனது சகபாடிகளைப் பார்த்து ஏளனக் கூச்சலிடுகிறது. தானும் சாக்கடைச் சகதியில் படுத்துப் புரளுவதைப் பற்றிக் கொஞ்சமும் வெட்கப்படவில்லை. ஆனால் அதன் செய்கை இலஞ்ச - ஊழல் என்பது ஏதோ விதிவிலக்காக, யாரோ சில பேராசைக்கார அரசியல்வாதிகள் - அதிகாரிகளின் குற்றம் அல்ல; சர்வகட்சிகளும் மூழ்கித் திளைக்கும் சர்வமயமான அரசியல் - சமுதாயக் கேடாகப் புரையோடிப் போன நோயாக உள்ளது என்பதற்கு ஒப்புதல் வாக்குமூலம்.

1991 ஆம் ஆண்டு மார்ச் 25-ம் நாள் பழைய டெல்லி ஜும்மா மசூதி போலீசார் சந்தேகத்துக்குரியவர்கள் என்று பிடித்த இரண்டு நபர்கள் கொடுத்த தகவலின் பேரில், ''காஷ்மீர் தீவிரவாதி''களின் நிதி மூலத்தைத் தேடி விசாரணை, சோதனைகளை நடத்தினர், மத்தியப் புலனாய்வுத் துறையினர். அப்போது நாட்டிலேயே மிகப்பெரிய ''ஹவாலா - பணக்கடத்தல்'' கும்பல் ஒன்றைத் தற்செயலாக இடைமறிக்க நேர்ந்தது. துபாயில் உள்ள பாகிஸ்தானின் மிகப் பெரிய கடத்தல் மாஃபியா கும்பலின் தலைவன் தாரிக் ரஷீத்பாய், துபாய் - சுவிஸ் - இலண்டன் ஆகிய இடங்களில் சுற்றும் அமீர்பாய், இலண்டனில் வாழும் டெல்லிக்காரன் சுதர்சன் அரோரா, இலண்டன் வங்கியாளர்கள் மோகினி ஜெயின் மற்றும் ரேகா ஜெயின் ஆகியோர் இந்தக் கடத்தல் கும்பலின் வெளிநாட்டு கூட்டாளிகள். டெல்லி நகை வியாபாரி நந்த கிஷோர், பம்பாயிலுள்ள மூல்சந்த் ஷா, டெல்லியில் வாழும் பன்னாட்டுத் தொழில் கழகங்களின் தரகர்களும், எரிசக்தித் துறை தொழில் அதிபர்களுமான ஜெயின் சகோதரர்கள் ஆகியோர் இந்த ''ஹவாலா - பணக்கடத்தல்'' கும்பலின் இந்தியக் கூட்டாளிகள். டெல்லியைச் சேர்ந்த சாம்பு தயாள் சர்மா மற்றும் ஜே.கே.ஜெயின் ஆகியோர் இக்கும்பலின் இடைத்தரகர்கள். இவர்களில் பலர் கைது செய்யப்பட்டு அலுவலகங்கள், வீடுகள், பண்ணை வீடுகள் (தொழிலபதிர் எஸ்.கே.ஜெயின் பண்ணை வீடு மட்டும் 50 கோடி ரூபாய் மதிப்புடையது) சோதனையிடப்பட்டன. இந்திய ரூபாயும், அமெரிக்க டாலருமாக பல இலட்சம் ரொக்கமும், நகைகளும், தங்கக் கட்டிகளும், ஹவாலா - பணக்கடத்தல், அந்நியச் செலாவணி மோசடி ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன.

எல்லாவற்றையும்விட முக்கியமாக இப்போது பிரபலமாகியுள்ள ''ஜெயின் டயரி'' எனப்படும் குறிப்பேடு ஒன்று சிக்கியது. அதில் எல்லா ''தேசிய'' அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் மொத்தம் 68 கோடி ரூபாய் ''ஹவாலா - கடத்தல் பணம்'' கையூட்டுக் கொடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய அரசியல் அமைப்பின் இழிவான கழிசடைத் தன்மையைப் படம் பிடித்துக் காட்டும் சாட்சியமாக அந்தக் குறிப்பேடு இருந்தது. அப்போதைய பிரதமராக இருந்த ''சோசலிச ஊழல்'' பெருச்சாளி சந்திரசே

www.padippakam.com




தலையங்கம் தொடர்ச்சி

கர், அந்தக் குறிப்பேட்டுக்கு ''சீல்'' வைத்துக் கிடப்பில் போடும்படியும், கைதான ஹவாலா கும்பலை விடுதலை செய்யும்படியும் சி.பி.ஐ.க்கு உத்திரவு போட்டார். ''காஷ்மீர் தீவிரவாதி'' இயக்கத் தொடர்பாளர்கள் இருவரும் ''தடா''வில் தள்ளப்பட்டனர்; ''தடா''வில் தள்ளப்பட வேண்டிய ஹவாலா கும்பல் விடுதலையானது. அப்போதைய சி.பி.ஐ. இயக்குநர் விஜய் கரனும் இலஞ்சம் பெற்றவர்களின் பட்டியலில் இருந்தார்; எனவே கூடுதல் அக்கறையுடன் வழக்கு கிடப்பில் போடப்பட்டது.

ஆனால் மூன்றாண்டுகளுக்குப் பிறகு ''ஜெயின் - டயரி''யில் உள்ள விவரங்கள் கசிந்து பத்திரிகைகளில் வெளியானதைத் தொடர்ந்து ''காலச் சக்கரா'' என்ற ''வீடியோ'' பத்திரிகை ஆசிரியர் வினீத் நாராயணன், பத்திரிகையாளர் ராஜேஷ் பூரி, வழக்கறிஞர் சாந்திபூசன் ஆகியோர் உச்ச நீதி மன்றத்தில் ஒரு பொது நல வழக்குப் போட்டனர். ''ஹவாலா இலஞ்ச ஊழல்'' விவகாரத்தை மூடி மறைத்துவிடும் அரசு - சி.பி.ஐ. சதியை முறியடிக்கும் முயற்சியில் அவர்கள் ஓரளவு வெற்றி பெற்றனர். ''இந்த விவகாரத்தின் மீது சி.பி.ஐ. இயக்குநரே புலனாய்வு செய்து வாராந்திர அறிக்கை தர வேண்டும்; துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று உத்திரவிட்டது உச்சநீதி மன்ற அமர்வுக் குழு.

பிரதமர் நரசிம்மராவின் நம்பிக்கைக்குரியவரான சி.பி.ஐ. இயக்குநர் விஜய ராமராவ் அரசியல் உள்நோக்கத்துடன் திட்டமிட்ட முறையில் காய்களை நகர்த்தினார். சர்க்கரை இறக்குமதி, பங்குச் சந்தைத் தாகன் அர்சத் மேத்தா கொடுத்த இலஞ்சம், பெங்களூர் நிறுவனத்திடமிருந்து பிரதமர் ராவின் மகனுக்குக் கொடுத்த இலஞ்சம் என்று பல விவகாரங்களிலும் நரசிம்மராவுக்கும் அவாது சகபாடிகளுக்கும் நன்னடத்தைச் சான்றுகள் தருவதையே தனது தலையாய பணியாகக் கொண்டிருப்பவர்தான் இப்போதைய சி.பி.ஐ. இயக்குநர் விஜய ராமராவ். நரசிம்மராவ் - ஜெயலலிதா கூடல், ஊடலைப் பொறுத்தே ஜெயா - சசி கும்பலின் கிரிமினல் வழக்குகளை நகர்த்துவதிலிருந்து சி.பி.ஐ.யின் யோக்கியதை புரியும்.

சி.பி.ஐ. அமைக்கப்பட்ட காலத்திலிருந்தே, அதன் அரசியல் தலைமையின் இலஞ்ச ஊழல், கிரிமினல் குற்றங்களை மூடிமறைக்கவும், அதன் அரசியல் எதிரிகளைப் பழிவாங்கவும் பயன்படுத்தப்பட்டு வருவதற்குச் சான்றுகள் பலவும் உள்ளன. ஊழல் பெருச்சாளிகளான சந்திரசேகர், நரசிம்மராவ் உத்திரவுப்படியே ஏறக்குறைய ஐந்தாண்டு கால குளிர்பதனப் பெட்டியில் போட்டுப் பூட்டி வைத்திருந்த ''ஜெயின் டயரி - ஹவாலா பணக்கடத்தல் ஊழல்'' வழக்கை, தேர்தல் நெருங்கும் வேளையில் அரசியல் மேடையேற்றி இருக்கிறது, சி.பி.ஐ.

மொத்தம் 115 அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் ஹவாலா பணம் பெற்றதாக ''ஜெயின் டயரி''யில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதமர் நரசிம்மராவுக்கு அவரது குரு சந்திராசாமி மூலமும், மந்திரி சத்தீஷ் சர்மா மூலமும் 3 கோடி ரூபாய், முன்னாள் பிரதமர் ராஜீவுக்கு சத்திஷ் சர்மா, தொழிலதிபர் லலித் சூரி ஆகியோர் மூலம் 10.5 கோடி ரூபாய், வி.பி.சிங் அமைச்சரவையில் இருந்த அரீஃப் முகமதுகானுக்கு 10.5 கோடி ரூபாய், அப்போதைய துணைப் பிரதமர் தேவிலால் மற்றும் அவரது பேரன் பிரதீப் குமார் மற்றும் பிற அமைச்சர்கள் யஷ்வந்த் சின்ஹா, முஃப்டி முகமது சையது, சரத் யாதவ், நரசிம்மராவ் அமைச்சரவையிலுள்ள வி.சி. சுக்லா, பலராம் ஜாக்கர், மாதவராவ் சிந்தியா, ராஜேஷ் பைலட், பிரணாப் முகர்ஜி, ஆர்.கே. தவாண், கமல்நாத், கிருஷ்ணா சாகி, பதவி இழந்த கல்பனாத் ராய், எதிர்க் கட்சித் தலைவர்களான அத்வானி, எஸ்.ஆர்.பொம்மை, அர்ஜுன் சிங், திவாரி, டெல்லி முதல்வர் மதன் லால் குரானா, மறைந்த முன்னாள் இராஜஸ்தான் மந்திரி கல்யாண் சிங் கால்வி, மத்திய மந்திரி தினேஷ் சிங், சிமன்பாய் பட்டேல் மற்றும் மத்திய உள்துறைச் செயலாளர் பத்மநாபையா, அரியானா தலைமைச் செயலாளர் உட்பட பல எரிசக்தித் துறை அதிகாரிகளின் பெயர்களும் ''ஜெயின் - டயரி''யில் இடம் பெற்றுள்ளன. இவர்கள் தவிர, தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா, அவரது அரசியல் ஆலோசகர் - முன்னாள் அரசுத் தலைவர் ஆர்.வெங்கடராமன் உட்பட பலரும் ''ஹவாலா'' பணம் கடத்தும் கும்பலின் பட்டியலில் இருப்பதாக அதன் தலைவர் ஜெயின் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இவர்களில் 32 அதிகாரிகள், மற்றும் 30 அரசியல்வாதிகளிடம் மட்டுமே சி.பி.ஐ. புலனாய்வு விசாரணை நடத்தியது. முக்கிய ஹவாலா பணக்கடத்தல் புள்ளிகள் நாட்டை விட்டுத் தப்பி ஓடவும், தலைமறைவாகவும் விட்டுவிட்டது. எஸ்.கே. ஜெயின், மூல் சந்த் ஷா ஆகிய ஓரிரு ஹவாலாப் புள்ளிகளை மட்டுமே கைது செய்து வைத்துள்ளது. இவர்கள் மீதும், எரிசக்தித் துறை அதிகாரிகள் 11 பேர் மீதும் முதல் தவணையாகக் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்தது. இரண்டாவது தவணையாக மூன்று மந்திரிகள், அத்வானி, அர்ஜுன் சிங், தேவிலால், அவரது பேரன் பிரதீப் குமார், அரிஃப் முகமது கான், சரத் யாதவ், யஷ்வந்த் சின்கா ஆகிய பத்துப்பேர் மீது மட்டும் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்துள்ளது. மற்றவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படுவதாகவும், போதிய ஆதாரம் கிடைத்

> ''இலஞ்ச - ஊழலினால் கறைபடியாத அரசியல் தலைவர்களோ, கட்சிகளோ இருக்க முடியாது; சர்க்கரை, பங்குச் சந்தை, தொலைபேசி தொடர்பான ஊழல்களைப் பெரிதுப்படுத்த வேண்டிய அவசியமில்லை'' என்ற கருத்தை உருவாக்குவதே ராவ் கும்பலின் நோக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

தால் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்யப்படும் என்றும் சி.பி.ஐ. கூறுகிறது. ராஜீவ், தினேஷ் சிங் உட்பட ஐந்துபேர் செத்துப் போனதால், கிரிமினல் வழக்குத் தொடுக்கச் சட்டத்தில் இடமில்லை என்று கூறிவிட்டது.

ஆனால் ஆளும் நரசிம்மராவ் கும்பலின் எதிர்த் தரப்பு அரசியல் தலைவர்களையும், கட்சிக்குள்ளாகவே உள்ள போட்டியாளர்களையும் இலஞ்ச ஊழல் — ஹவாலா மோசடியில் சிக்க வைப்பதுதான் சி.பி.ஐ.யின் நோக்கம்; தேவையானால் தனது விசுவாசிகளில் ஒரு சிலரைக் கூட அது பலியிடவும் தயாராக உள்ளது. இந்த அடிப்படையில் தான், ஜெயின் டயரியில் உள்ள நபர்களில் சிலர் மீது மட்டும் தெரிந்தெடுத்துக் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இப்போதைய இந்த நடவடிக்கைக்கு இரண்டு காரணங்கள்தாம் இருக்க முடியும் என்பது வெளிப்படை.

★ நரசிம்மராவ் தான் இன்றைய திருவாளர் பரிசுத்தம்; மற்றபடி அவருக்கு எதிரான அனைத்துக் கட்சித் தலைவர்களும் இலஞ்ச ஊழல் அந்நிய செலாவணி மோசடிப் பேர்வழிகள் என்று நிலைநாட்டி மக்கள் முன் தனது எதிரிகள் மீது மதிப்பிழக்கச் செய்து, தேர்தலில் ஆதாயம் அடைவது.

★ நரசிம்மராவ் மீதும் அவரது அமைச்சர்கள் பலரும் பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு அடுத்தடுத்து இலஞ்ச - ஊழல் - அதிகார முறைகேடுகளில் சிக்கி நாறிய நிலையில், ''அரசியலில் சுத்தமானவர்கள், யோக்கியமானவர்கள் எவரும் கிடையாது; இலஞ்ச - ஊழலினால் கறைபடியாத அரசியல் தலைவர்களோ, கட்சிகளோ இருக்க முடியாது; இந்தப் பிரச்சினையைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியமில்லை'' என்கிற கருத்தை உருவாக்குவது.

இந்த நோக்கத்தோடு உடனடியாகவே நரசிம்மராவுக்கு ''திருவாளர் பரிசுத்தம்'' பட்டம் சூட்டிப் பிரச்சாரத்தைத் துவங்கிவிட்டது அவரது கோயபல்சுக் கூட்டம். தனது கட்சிக்காரர்களேயானாலும் துணிச்சலாக, பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கிறார் என்று சித்தரிக்கின்றனர். மறுபுறம் நரசிம்மராவோ, ''சட்டம் தனது வேலையைச் செய்யும்; ஊழல் ஒரு தேர்தல் பிரச்சினையே இல்லை'' என்று பேசுகிறார். நரசிம்மராவ், அவரது மகன் மற்றும் அவரது அமைச்சர்கள் கல்பனாத் ராய், சங்கரானந்த், சத்தீஷ் சர்மா, ஜாபர் ஷெரீப், சுக்ராம் போன்ற பலர் பல்வேறு ஊழல்களில் சிக்கி அம்பலமான போதும் நடவடிக்கை எடுக்க மறுத்த சி.பி.ஐ., இப்போது தெரிந்தெடுத்த ஒரு சிலர் மீது மட்டும் குற்றப் பத்திரிக்கைத் தாக்கல் செய்திருப்பது அரசியல் உள்நோக்கம் கருதித்தான் என்பது தெளிவு.

உச்சநீதி மன்றமே பல வழக்குகளில் அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படும்போது, அதைக் காரணங் காட்டி தப்பிக்க முயலுகிறது. சி.பி.ஐ.யைப் போலவே, உச்சநீதி மன்றமும் அரசின் கருவிதான் என்பதும் உண்மையாகும்.

ஆளும் நரசிம்மராவ் கும்பலின் நோக்கமும் ஆசையும் எதுவாக இருந்தாலும் சரி, அவை நிறைவேறும் சாத்தியமே கிடையாது. ராவின் ஹவாலா சாகசங்கள், அவரது கட்சிக்குள்ளாகவே கும்பல் சண்டைகளையும் ஆத்திரங்களையும் வெடிக்கச் செய்துவிட்டன. துரோகமிழைத்துப் பலிகிடாவாக்கப்பட்டுவிட்டதாக, குற்றசாட்டுக்குள்ளான மந்திரிகள் கூச்சல் போடுகின்றனர்.

> கூடுமானவரை ஹவாலாப் பணம் கொடுத்தவர்கள் - பெற்றவர்களுக்கு இடையிலான விவகாரமாக எல்லாவற்றையும் சுருக்கிவிட சி.பி.ஐ. எத்தணிக்கிறது. என்ன நோக்கத்திற்காக, எந்த மூலத்திலிருந்து பணம் கை மாறியது என்கிற கோணத்துக்குள் போக மறுக்கிறது.

எதிர்க்கட்சிகளோ, - குறிப்பாக பாரதீய ஜனதா - ஆத்திரத்தில் பெருங்கூச்சல் போடுகின்றன. தனது இலஞ்ச ஊழல்களை மூடிமறைத்து, எதிர்க்கட்சிகள் மீது அவதூறுக் குற்றச்சாட்டுகள் வீசி இழிவுபடுத்தும் சதிதான் இதுவென்றும், வழக்கு தொடர்பான முழு விவரங்கள் - ஆவணங்களையும் வெளியிட வேண்டும் என்றும் கோருகின்றன. அத்வானி உட்பட குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அவரது கட்சிக்காரர்கள் பதவி விலகி, யோக்கியவான்களாக நாடகமாடி, ராவின் நோக்கத்தை முறியடிக்க முயலுகின்றனர். சாத் யாதவ், ராஜேஷ் பைலட் உட்பட சிலர் தவிர அனைவருமே ஹவாலாப் பணம் பெற்றதை மறுக்கின்றனர்; கட்சி நிதிக்காகப் பணம் பெற்றுத் தந்ததாக அவர் ஒப்புக் கொண்டுள்ளார். ''அரசியல் கட்சிகளின் தேர்தல் செலவுகளை அரசே ஏற்பதன் மூலம்தான் இதைத் தடுக்க முடியும்'' என்கின்றனர் சில எதிர்க் கட்சியினர்.

''ஜோதிபாசுவின் ஆட்சியில் இலஞ்ச ஊழல் புழுத்து நாறுகிறது'' என்று சி.பி.எம். கட்சியின் முன்னாள் திரிபுரா முதல்வர் நிரூபன் சக்கவர்த்தியும், ''இடதுசாரி கூட்டணி ஆட்சி ஒப்பந்தக்காரர்களின் ஊழல் ஆட்சியாகி விட்டது'' என்று மேற்கு வங்க மூத்த அமைச்சர் பினாய் சௌத்ரியும் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் ஜெயின் டயரியில் அக்கட்சியினர் பெயர் இல்லை என்பதை வைத்து, ''இடதுசாரிக் கட்சிகள் மட்டுமே யோக்கிய:மானவை'' என்று தமக்குத்தாமே நன்னடத்தைச் சான்றிதழ் கொடுத்துக் கொள்கின்றனர், 'மார்க்சிஸ்டு'கள். கல்கத்தா மாஃபியா கும்பல் தலைவன் ரஷீத் கானின் குறிப்பேட்டைப் புரட்டினால் போதும் இவர்களது குட்டு வெளிப்படும் என்பது வேறு கதை!

ஹவாலாப் பணம் பெற்ற அரசியல் தலைவர்கள், கட்சிகளின் குடுமிப்பிடிச் சண்டைகளைத் தாண்டி மேலும் ஒரு படி சென்று ''எதற்காக யாரால் இந்தப் பணம் தரப்பட்டது? எந்த அடிப்படையில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன இப்படிப்பட்ட ஊழல்கள் மோசடிகளின் விளைவுகள், பாதிப்புகள் என்னென்ன?'' என்று பார்க்க வேண்டும். இந்த வழக்கின் பிரதானக் குற்றவாளிகளுடைய தகவல்களின்படி மூன்று வகையில் ஹவாலாப் பணம் பட்டுவடா செய்யப்பட்டுள்ளது; அவை: அரசு ஒப்பந்தங்கள் பெறுவதற்கான இலஞ்சம்; வெளி நாடுகளில் குவித்து வைத்துள்ள கள்ளப்பணம்தான் ''ஹவாலா'' முறைப்படி கடத்தி வரப்பட்டு இந்திய நாணயத்தில் தரப்பட்டது; பல குற்றங்கள் செய்து விட்டுச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத் தரப்படும் ''மாமூல்'' பணம்.

இந்த அடிப்படைகளில் தான் ஹவாலாப் பணம் பட்டுவடா நடந்தது என்றால் நாட்டின் அரசியல்

தொடர்ச்சி 21-ம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

# காவிரி வறண்ட போது 'தேசியம்' அம்பலமானது

**காவிரி பிரச்சினையில் தமிழகத்திற்கு மீண்டும் ஒருமுறை துரோகம் இழைக்கப்பட்டுள்ளது.**

காவிரி நீர்ப் பிரச்சினையில் ஒவ்வொரு முறையும் 'தேசிய'க் கட்சிகள் எனப்படுகிற காங்கிரசு, பாரதிய ஜனதா, ஜனதா தளம், வலது - இடது கம்யூனிஸ்டுகள் இரட்டை வேடம் போடுவதும் மாநிலக் கட்சிகளான அ.தி.மு.க., தி.மு.க., பா.ம.க. போன்றவை சவடால் அடித்து, அக்கறையுள்ளதாகக் காட்டிக் கொள்வதும் வழமையானவை.

இம்முறை 'தேசிய'க் கட்சிகள், ''இரு மாநிலக் கட்சிகளுக்கும் இடையில் ஒத்தக் கருத்தை உருவாக்க முயல்வோம்'' என்று உரக்கக் கூச்சலிடுகின்றன. மத்திய காங்கிரசு அரசோ நடுநிலையாளனாக - நியாயவானாக நடந்து கொள்வதாகச் சித்தரிக்க அரும்பாடுபடுகிறது. கூடவே இதைச் சாக்கிட்டு ஜெயாவுடன் தமிழக காங்கிரசின் உறவை - கூட்டைப் புதுப்பிக்க முயற்சி செய்கிறார், நரசிம்மராவ். ''உண்ணாவிரதமிருந்தெல்லாம் போராடியவள் நான்'' என்று ஜெயலலிதாவும், ''எனது முயற்சியால் - போராட்டத்தால் அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்தை முடமாக்கச் சதி நடக்கிறது'' என்று கருணாநிதியும் தம்மை முன்னிறுத்திக் கொள்வது மேலோங்கி நிற்கிறது. ''கர்நாடக அரசை நீக்கு'', ''கர்நாடகத்திற்கு மின்சாரத்தை வழங்காதே'' என்று பா.ம.க., வாழப்பாடி காங்கிரசு போன்ற கட்சிகள் ''தீவிரமாக''க் கத்துகின்றன. ஓட்டுக் கட்சிகளின் இத்தகைய நடவடிக்கைகளுக்குக் காரணம், தேர்தல் நெருங்கி விட்டது என்பதே.

தென்மேற்குப் பருவமழை இல்லாது போனதால் கடந்த வருடம் செப்டம்பர் வரை 4 லட்சம் ஏக்கர் அளவில் குறுவைப் பயிர் சாகுபடி வீணாகியது. தற்போது வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்துப் போய், காவிரியில் வரவேண்டிய நீரும் வராததால் சுமார் 2.5 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா, தாளடிப் பயிர்கள் கருகி வருகின்றன. இதற்கு 6000 கோடி கனஅடி நீர் தேவை என நிபுணர்கள் மதிப்பிடுகிறார்கள். தமிழக அரசு கேட்டதோ 3000 கோடி கன அடிநீர். காவிரி நடுவர் மன்ற இடைக்கால உத்தரவுபடி குறிப்பிட்ட மாதங்களில் திறந்து விட வேண்டிய அளவில்லாமல் 2800 கோடி கனஅடி நீர் கூடுதலாக திறந்து விடப்பட வேண்டும் என்றும் ஆனால் கர்நாடக அரசு காட்டிய நீர் நிலை அளவு, பாடிய பஞ்சப் பாட்டை வைத்தெல்லாம் கணக்குப் போட்டு 1100 கோடி கன அடி நீரைத் திறந்துவிடும்படியும் தற்போது தீர்ப்பளித்தது, நடுவர் மன்றம். நடுவர் மன்றத் தீர்ப்பை தேவகவுடா ஏற்கவில்லை. இதற்கெதிராக தொடுக்கப்பட்ட வழக்கைப் பரிசீலிக்கும்படி உச்சநீதி மன்றமோ பிரதமருக்குத் திசை திருப்பிவிட்டது. நரசிம்மராவ், இரு முதல்வர்களுடனும் பேசி தனக்குத் தெரிந்த 'பஞ்சாங்கக் கணக்குபடி' 600 கோடி கன அடி நீரைத் திறந்துவிட உத்தரவிட்டார்.

இப்படி பிச்சையிட்டதையும், பிச்சை பெற்றதையும் மத்திய, மாநில ஆட்சியாளர்கள் சாதனையாக்க் காட்டிக் கொள்கிறார்கள். எதிர்க் கட்சிகள் இதற்கு எதிராக முனுமுனுப்பதுமாகப் பிரச்சினையை இத்தோடு அநேகமாக கிடப்பில் போட்டுவிட்டார்கள். இதைத்தவிர பச்சைத் துரோகம் வேறு எதுவுமில்லை.

1100 கோடி கனஅடி நீரைத் திறந்துவிட்டால் கூட 10,15 சதவிகிதப் பயிர்களைத்தான் காப்பாற்ற முடியும். 25 இலட்சம் டன் நெல் உற்பத்தி இழப்பையும், விவசாய விளை பொருட்களின் உப உற்பத்தி தொழில்கள் பாதிப்பையும் சேர்த்தால் ஏற்படுகிற 800 கோடி ரூபாய் நட்டத்தில் 10 சதவிகிதம்தான் தடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் அரிசி தட்டுப்பாடும், விலையேற்றமும் மேலும் அதிகரிக்கும். காவிரி நீரிலிருந்து தயாரிக்கப்படுகிற நீர் மின்சார உற்பத்தி குறைந்து, மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மின்சாரத்தை நம்பிய பிற பொருள் உற்பத்திகளும் பாதிக்கப்பட்டு ஒட்டு மொத்தத்தில் அனைத்துப் பொருட்களின் விலை கூடும்.

என்ன இழப்பு - பாதிப்பு வந்தாலும் தமிழகம் 'அமைதிப் பூங்கா'வாகவே இருப்பது வெட்கக் கேடானது. வெட்கங்கெட்ட ஓட்டுப் பொறுக்கிகள் வேண்டுமானால் இதைப் பெருமையாக பீற்றிக் கொள்ளலாம். இதுமட்டுமல்லாது சொரணையும் கெட்டவர்கள் இவர்கள். கர்நாடக அரசியல் தலைவர்கள் இனவெறியோடு தமிழகத்தையும் தமிழர்களையும் தாக்கிப் பேசி இழிவுபடுத்திய போதும், அவதூறு பரப்பிய போது இவர்களிடம் ஆமை நடை வேகம்தான் வெளிப்பட்டது. அந்த அளவிற்குச் சட்டவாத - காரியவாத சகதிக்குள் ஆழமாகக் கால்பதித்து நிற்கின்றன, தமிழக ஓட்டுக் கட்சிகள்.


''கடலில் நீரை வீணாகக் கொட்டாமல் தடுத்துப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்; மூன்றாவது சாகுபடியை நிறுத்துங்கள்'' என்று கட்டளையிடுகிறார் நஞ்சுண்டசாமி. ''கோடைப் பயிருக்காகத் தண்ணீரைத் தேக்கி வைக்கவே பொய்கூறி தமிழகம் நீர் திறந்துவிடக் கோருகிறது'' என்பது, பங்காரப்பா - வட்டாள் நாகராஜ் ஆகியவர்களுக்கு நான் சளைத்தவனல்ல எனச் சவால்விடும் தேவகவுடாவின் குற்றச் சாட்டு. இது தேவகவுடாவின் ஆத்திரமூட்டக்கூடிய அவதூறுகளுள் தலையானது.

மன்னார்குடி நெற்பயிரைக் கையில் வைத்துக் கொண்டு, சுட்டிக் காட்டி, பசுமையாக இருப்பதாகவும், பயிர்கள் கருகிவிட்டதாகத் தமிழர்கள் பொய் கூறுவதாகவும் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிக்கிற திமிர் தேவகவுடாவிற்கு எப்படி, எங்கிருந்து வந்தது?

மத்திய அரசு, நீதிமன்றம், நடுவர் மன்றம் அனைத்தும் ஒவ்வொரு முறையும், தொடர்ந்தும் கர்நாடக அரசின் அநியாய வாதம், அடாவடித்தன செயல்பாட்டிற்குச் சாதகமாகவே செயல்படுகின்றன; தீர்ப்பு வழங்குகின்றன. நடுவர் மன்றத்தின் 20,500 கோடி கனஅடி நீர் வழங்க வேண்டும் என்ற இடைக்கால உத்தரவை அமல்படுத்த மறுத்த கர்நாடக அரசைக் கண்டித்து உச்சநீதி மன்றமும் நடுவர் மன்ற தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டு மத்திய அரசும் முன்பு செயல்பட்டிருக்கலாம்.

www.padippakam.com

ஆனால் இதற்குப் பிறகும் அடாவடித்தனம் செய்த கர்நாடக அரசுக்கு எதிராக இவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக் கிழித்துவிட்டார்கள்? நடுவர் மன்றத்தையே ஏற்க முடியாது என்று கூறுகிற கர்நாடக அரசை வேடிக்கைப் பார்த்துக் கொண்டுதானே இருக்க முடிகிறது? இந்திய அரசியலமைப்புச் சட்டபடி கர்நாடக அரசை மத்திய அரசு வேண்டுமானால் கலைத்து விடுவதுதான் அதிகபட்ச நடவடிக்கையாக இருக்க முடியும். அப்படிக் கலைத்து விட்டால், பிறகு எதிர்ப்புகளை மீறி, ஓட்டு இழப்புகளை மீறி நடுவர் மன்ற உத்தரவை நடைமுறைப்




படுத்த முடியாத சிக்கலல்லவா, மத்திய ஆளுங்கட்சிக்கும் ஏற்படுகிறது?

இதனால் இவர்கள் மாறி, மாறி கைகாட்டி ''கண்ணாமூச்சி'' விளையாட்டு நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. மேலும் காவிரி பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய உருப்படியான நதிநீர் பங்கீட்டுக் கொள்கைகளும் இந்திய ஆட்சியாளர்களின் கையில் இல்லை. இதனால்தான் நடுவர்மன்ற உத்தரவை கர்நாடக அரசு அமல்படுத்துவதற்கு ''நடைமுறைக் குழுவையும், கண்காணிப்புக் குழுவையும் நியமி'' என்கிற தமிழக அரசின் கோரிக்கை நீண்டகாலமாகக் கிடப்பில் போடப்படுகிறது. மாறாக, தற்போது நிபுணர் குழு நியமித்து உண்மையைக் கண்டறிவது என்று கர்நாடக அரசு கோரியதை - மீண்டும் மீண்டும் ஆய்வு என்கிற இழுத்தடிப்பைப் பிரதமர் ராவ் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துகிறார்.

இவற்றிற்கு எதிராகவெல்லாம் தமிழர்கள் எங்கு சென்றாலும் நியாயம் கிடைக்காது என்பதற்குத் தற்போது உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கான காரணமே சாட்சி. இந்திய அரசியலமைப்புத் தூண்களில் 'சுயேச்சையான', தனி உச்சபட்ச அதிகாரம் படைத்ததாகக் கூறப்படும் உச்சநீதி மன்றம் காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தன்னால் தீர்ப்பு வழங்க முடியாது என்று அப்பொறுப்பை பிரதமரிடம் விட்டு அதற்காகக் கூறும் காரணம் இது:

''இந்த விசயத்தில் நீதிமன்றம் ஒரு மாநிலத்துக்குச் சாதகமாகக் கருத்து கூறும்போது அடுத்த மாநிலத்தில் பெரும் விளைவுகள் ஏற்படும் என்பதை நாம் மறந்துவிடக்

> காவிரி நீர்ப் பிரச்சினையில் ஓட்டு ஆதாயம், சுய-குறுகிய இலாபம் காரணமாக ஆளும் கும்பல் - ஓட்டுப் பொறுக்கிகள் மேலும் மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கி, இரு மாநில மக்கள் மத்தியிலும் இனப்பகைமையை விதைத்து வருகிறார்கள்.

கூடாது. தண்ணீர் விடுமாறு உத்தரவிடப்பட்ட மாநிலத்தின் மக்கள் தெருக்களில் குவிந்து போராடுவார்கள். பெரிய அளவில் கொலைகள் நடக்கும்; பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படும். இதெல்லாம் நாம் ஏற்கனவே பார்த்ததுதான்.''

தடியெடுத்தவன் தண்டல்காரன்; கோலெடுத்தவன் குரங்காட்டி; அவன் பக்கமே நியாயம். அருமையான இந்திய ஜனநாயகம்! (உச்சநீதி மன்றம் முன்வைக்கும் இந்த அளவு கோலை எல்லா பிரச்சினைக்கும் முன்வைத்தால் அவர்களே சகிக்க முடியாத அபத்தமாகவே இருக்கும் என்பது வேறு விசயம்)

இப்பொழுது சொல்லுங்கள், பங்காரப்பாவிற்கும், வட்டாள் நாகராஜிற்கும், தேவகவுடாவிற்கும் திமிர் எப்படி, எங்கிருந்து வந்தது என்று?

சர்வதேச நதிநீர்ப் பங்கீட்டுக் கொள்கைபடி காவிரியின் கடைமடைப் பகுதியான தமிழக மக்களுக்கே அதில் அதிக உரிமை உண்டு. ஆனால், இந்த உரிமை இந்திய அரசியலமைப்பு - சட்டத்திற்குள் நடைமுறையாகவில்லை; நடைமுறைப்படுத்தவும் முடியவில்லை. எனவே, தமிழ்நாடு தனியாக பிரிந்து போவதும், மின்சாரம் மற்றும் பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வந்து கர்நாடகத்தைப் பணிய வைக்க முயல்வதும்தான் தீர்வு எனச் சில தமிழின குழுக்கள் முன் வைக்கிறார்கள். அண்மைய தீர்ப்பில் உச்சநீதி மன்ற நீதிபதிகளும் 'இதைச்' சுட்டிக் காட்டி எச்சரித்துள்ளனர்; அரசியல் வாதிகள் சுயநல செயல்பாடுகளைக் கைவிட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முன் வரவேண்டும் என்று அறிவுரை வழங்கியுள்ளனர்.

தேசிய இனப் போராட்டத்திற்கு தூண்டுதலாகவும், காரணமாகவும் இருக்கிற இந்திய அரசே, பின் அப்போராட்டத்தைக் கொடுங்கரம் கொண்டு ஒடுக்கி, அடக்கவும் செய்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. காவிரி நீர்ப் பிரச்சினையில் ஓட்டு ஆதாயம், சுய - குறுகிய இலாபம், இனவெறி, தேசிய இன ஒடுக்குமுறை தன்மை காரணமாக ஆளும் கும்பல் ஓட்டுப் பொறுக்கி கட்சிகள் மேலும் மேலும் சிக்கலுக்குள்ளாகி, இரு மாநில மக்கள் மத்தியிலும் இனப்பகைமையை விதைத்து வருகிறார்கள் என்பதும் உண்மை. கன்னடர் மற்றும் தமிழர்களில் உழைக்கும் மக்கள் பிரிவினர் மேற்படிக் கும்பலைப் புறக்கணித்து, தனிமைப்படுத்தி முறியடிப்பதும் காவிரியில் கடைமடைப் பகுதி உரிமையை அங்கீகரித்துக் கன்னட உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து போராடுவதுமே முன் தேவையாக உள்ளது.

புருலியா விவகாரம்:

# ஆயுத மழையில் அம்பலமாகும் உண்மைகள்

மே.வங்கத்திலுள்ள புருலியா மாவட்டத்தில் அன்னிய விமானத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அதி நவீன ஆயுதங்கள் ரகசியமாகப் போடப்பட்டதைத் தொடர்ந்து, இந்திய அரசும் பாதுகாப்பு - உளவு நிறுவனங்களும் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளன. ''பயங்கரவாதிகளால் நாட்டுக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது; நாட்டின் பாதுகாப்புத் துறையில் ஓட்டைகள் உள்ளன'' என்று பத்திரிகைகள் அலறுகின்றன. பாக்.உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.யின் சதிதான் இது என்று மத்திய உள்துறை அமைச்சரான சவான் எகிறிக் குதிக்கிறார். புருலியா மாவட்டத்தில் அன்னிய விமானம் ரகசியமாகப் போட்ட ஆயுதங்களை மீட்க போலீசாரும் அதிரடிப் படையினரும் இரவு பகலாக கிராமங்களை வேட்டையாடுகின்றனர். இந்தியாவின் அனைத்து உளவு நிறுவனங்களும் பல்வேறு கோணங்களில் ரகசிய விசாரணை நடத்தி வருவதாகப் பரபரப்பூட்டுகின்றன.

அன்னிய விமானத்தில் வந்து ஆயுதங்களைப் போட்ட சதிகாரர்கள் யார்? யாருக்காக இந்த ஆயுதங்கள் ரகசியமாக வந்திறங்கியது? அவர்களின் நோக்கம் - பின்னணி என்ன? என்கிற கோடி ரூபாய் கேள்விக்கு இன்றுவரை விடை காணப்படாமல் இன்னமும் மர்மம் நீடிக்கிறது.

**நடந்தது என்ன?**

கடந்த டிசம்பர் மாதம் 17-ம் நாளன்று ரஷிய தயாரிப்பான ''அன்டோனாவ்-26'' ரக விமானம் ஒன்று மே.வங்கத்திலுள்ள புருலியா மாவட்டத்தில் நள்ளிரவில் தாழ்வாகப் பறந்து வந்து பெட்டி பெட்டியாக ஆயுதங்களை ''பாராசூட்'' மூலம் போட்டு விட்டுச் சென்றது. ஏ.கே.47, ஏ.கே.56 ரக அதிநவீன எந்திரத் துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், ஏவுகணைத் தாங்கிகள், டாங்கி எதிர்ப்பு குண்டுகள், கையெறி குண்டுகள், துப்பாக்கி ரவைகள் முதலான அதிநவீன ஆயுதங்கள் அப்பெட்டிகளில் இருந்தன.

பாகிஸ்தானின் துறைமுக நகரமான கராச்சியிலிருந்து டிசம்பர் 17 அன்று பிற்பகலில் புறப்பட்ட இந்த விமானம் எரிபொருள் நிரப்பிக் கொள்வதற்காக அன்று மாலையில் வாரணாசியில் தரையிறங்கியது. பின்னர் அன்று இரவு 10 மணிக்குப் புறப்பட்டு கல்கத்தா சென்றது. வாரணாசியிலிருந்து ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்குள் இந்த விமானம் கல்கத்தாவுக்குச் சென்றிருக்க வேண்டும். ஆனால் நள்ளிரவு 12.45-க்குத்தான் கல்கத்தாவில் தரையிறங்கியது. இடைப்பட்ட நேரத்தில்தான் இந்த விமானம் புருலியாவில் ஆயுதங்களைச் சொரிந்துவிட்டுச் சென்றுள்ளது. வாரணாசி, கல்கத்தா விமான நிலையங்களிலுள்ள ரேடார் திரையிலிருந்து இந்த விமானம் மறைந்து போனது பற்றி விமான நிலைய கட்டுப்பாட்டுத் துறையினர் யாரும் கேள்வி எழுப்பவில்லை. மேலும் புருலியா அருகிலும் சிலிகுரியிலும் உள்ள விமானப் படையின் ரேடார் நிலையங்களும் திசை விலகி சுற்றிய இந்த விமானம் பற்றி விசாரிக்கவுமில்லை.

> சர்வதேச - கிரிமினல் குற்றக் கும்பல்களின் துணையோடு இந்திய கடத்தல் மாஃபியாக்கள் புருலியாவில் ரகசியமாக ஆயுதங்களை இறக்கியிருக்க வாய்ப்புகள் நிறையவே உள்ளது.


டிசம்பர் 18-ம் நாளன்று இந்த விமானத்திலிருந்தோர் தாங்கள் தாய்லாந்திலுள்ள புகெட் நகருக்கு செல்வதாகவும், அங்கிருந்து திரும்பும் போது கல்கத்தாவில் எரிபொருள் நிரப்பிக் கொள்ள அனுமதி தருமாறும் கோரினர். அப்போதும் விமான நிலைய கட்டுப்பாட்டுத் துறையினர் எவ்வித சந்தேகமும் கொள்ளவில்லை. டிசம்பர் 21 அன்று புகெட் நகரிலிருந்து புறப்பட்ட இந்த விமானம் தான் அறிவித்தபடி கல்கத்தாவுக்குத் திரும்பாமல், சென்னை விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பிக் கொள்ள தரை இறங்கியது. அடுத்த இரண்டு மணி நேரத்தில் அது பம்பாய்க்குப் புறப்பட்ட பிறகுதான் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டுத் துறை விழித்துக் கொண்டது. அனுமதியில்லாமல் சென்னையில் தரையிறங்கியதைப் பற்றி விசாரிக்க, நடுவானில் பறந்து கொண்டிருந்த இந்த விமானத்துக்கு எச்சரிக்கை தரப்பட்டு, பம்பாயில் கட்டாயமாகத் தரையிறக்கி சோதிக்கப்பட்டது.

டிசம்பர் 22-ம் நாளன்று அதிகாலையில் இந்த விமானம் பம்பாயில் தரையிறக்கப்பட்டதும், துணை விமான ஓட்டியான கிம் டேவி என்பவன், விமான நிலையத்தில் தரை இறக்கியதற்கான கட்டணத்தைச் செலுத்திவிட்டு வருவதாகக் கூறி, தப்பியோடி தலைமறைவாகிவிட்டான். நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த இவன்தான் ஆயுதமழை நடவடிக்கையை வழிநடத்தியவன் என்று தெரிய வந்துள்ளது. ஹாங்காங்கைச் சேர்ந்த கரோல் ஏர் லைன்ஸ் என்ற தனியார் நிறுவனத்திடமிருந்து இந்த விமானம் வாடகைக்குப் பெறப்பட்டது என்றும், கிம் டேவி இந்நிறுவனத்தின் அதிபராகவோ, தொழில் கூட்டாளியாகவோ இருக்கலாம் என்றும் விசாரணையில் வெளிப்பட்டுள்ளது. விமானத்திலிருந்த மற்ற 6 பேரில் ஐந்து பேர் முன்னாள் ரஷிய ஒன்றியத்திலிருந்த பால்டிக் நாடுகளுள் ஒன்றான லாட்வியாவைச் சேர்ந்தவர்கள். இக்கூலிப் படையினரில் மற்றொருவனாகிய பீட்டர் பிளீக் என்பவன் பிரிட்டனின் முன்னாள் ராணுவ அதிகாரி ஆவான். இவர் இந்தியாவில் தீபக் மற்றும் ரண்டி எனப்படும் ரந்தீர் ஆகியோர் தமக்கு உதவிகள் செய்ததாகக் கூறியுள்ளான். விமானத்திலிருந்த கூலிப் படையினர் கைது செய்யப்பட்டு விசாரணை நடந்து வந்த

www.padippakam.com

## புருலியா விவகாரம் - வேறு கோணத்திலிருந்து:

# உளவுப்படை "ரா"-வின் கைவரிசையா?




புருலியாவில் நடந்த ஆயுத மழை, இந்திய உளவுத் துறையான "ரா" (RAW) வின் கைவரிசையாக இருக்கலாம் என்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. ஆளும் பாசிச கும்பல்களின் நோக்கங்களை நிறைவேற்ற இத்தகைய சதிகார நடவடிக்கைகளில் ஏற்கனவே "ரா" ஈடுபட்டு வந்துள்ளது.

★ 1987 நவம்பரில் டெல்லி விமான நிலையத்தில் ஒரு வெளிநாட்டு விமானத்திலிருந்து இறக்கிய சரக்குப் பெட்டியில் அதிநவீன ஆயுதங்கள் இருந்தன. பீதியடைந்த விமான நிலைய அதிகாரிகள் உளவு நிறுவனங்களுக்குத் தகவல் அனுப்பியதும், ஒரு "ரா" உளவாளி இவற்றை அரசாங்கச் சொத்து என்று வாங்கிச் சென்றார். பின்னர் இதுபற்றிய செய்திகள் வெளிவராமல் அமுக்கப்பட்டன. "ரா" வினால் ஊட்டி வளர்க்கப்பட்ட ஒரு சீக்கிய தீவிரவாத கும்பலுக்காகவே இந்த ஆயுதங்கள் வந்திறங்கின என்பது விரைவிலேயே அம்பலமானது. "ரா"வின் வழிகாட்டுதலின்படி இத்தீவிரவாதக் குழு பஞ்சாபிலுள்ள இந்து கோயில்களின் சுற்றுச் சுவர்களைக் குண்டு வீசித் தாக்கியது. அதைத் தொடர்ந்து பஞ்சாபில் 59-வது அரசியல் சட்டத்திருத்தமும், அவசரநிலை ஆட்சியும் அறிவிக்கப்பட்டன. பயங்கரவாத பீதியூட்டி பஞ்சாபில் பாசிச ஆட்சியை நிறுவுவதற்காகவே "ரா" இச்சதி நடவடிக்கையை மேற்கொண்டது.

★ அசாமில் கணபரிஷத் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு, போடோ இன மக்களின் போராட்டத்தை "ரா" பகடைக் காயாக்கிக் கொண்டது. 1989-ல் "ஜும்ஜும்" நடவடிக்கை என்ற பெயரில் போடோ தலைமையை விலைபேசி ஆயுத உதவிகள் செய்து பயங்கரவாதத்தைக் கிளறி விட்டது. கணபரிஷத் ஆட்சியைக் கலைப்பது, போடோ பிரச்சினை தீராமல் நீட்டிக்கச் செய்வதன் மூலம் அசாமில் அரசு பயங்கரவாத ஆட்சியை நிரந்தரமாக நிறுவுவது என்ற நோக்கத்துடன் "ரா" இச்சதிகளை அரங்கேற்றியது.

★ எல்லாவற்றுக்கும் மேலாக, ஈழ விடுதலைப் போராட்டத்தில் தலையிட்டு போராளிக் குழுக்களை சீரழித்து, மோத விட்டு ரத்தம் குடித்தது. ஈழத் துரோகிகளுக்கு ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்து போராட்டத்தை சீர் குலைத்ததை ஈழ ஆதரவாளர்கள் நன்கறிவார்கள்.

சதிகார உளவு நிறுவனமான "ரா", பொதுத்தேர்தல் நெருங்கும் நேரத்தில் வடகிழக்கு மாநிலங்களில் ஏதோவொரு பயங்கரவாதச் சதியை மேற் கொள்ளும் நோக்கத்துடன் ரகசியமாக ஆயுதங்களை இறக்கியிருக்கலாம், ஏனெனில்,

★ அசாமில் இப்போது உல்பா (ULFA) போராளிகளைப் பிடிப்பது என்ற பெயரில் பெருமளவில் ராணுவம் குவிக்கப்பட்டு தேடுதல் வேட்டை நடக்கிறது.

★ திரிபுரா, மிஜோரம், அருணாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சாக்மா அகதிகளை வெளியேற்றக் கோரி இனக்கலவரம் பரவி வருகிறது. கலவரத்தைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில் இம் மாநிலங்களில் துணை ராணுவப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

★ இவை தவிர, வடகிழக்கு மாநிலங்களில் சுயநிர்ணய உரிமை கோரி ஆயுத மேந்திப் போராடி வரும் போராளி அமைப்புகள் தற்போது ஒருங்கிணைந்து செயல்படத் தீர்மானித்துள்ளன.

— இந்நிலைமைகள் காரணமாக, இந்திய உளவு நிறுவனமான "ரா", ஏதோவொரு துரோக அமைப்புக்கு ஆயுதங்களைக் கொடுத்து பயங்கரவாதத்தைத் தூண்டி விடுவது, பின்னர் ஆயுதங்களைக் கைப்பற்றியதாக நாடகமாடுவது, அன்னியச் சதி - நாட்டுக்கு பேராபத்து என்று பீதியூட்டி, அம்மாநிலங்களில் நிரந்தரமாக ராணுவத்தை நிறுத்தி பயங்கரவாத அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவது என்கிற சதியின் ஒரு அங்கம்தான் இது என்று சந்தேகிக்க காரணங்கள் வலுவாகவே உள்ளன.

போதிலும், தப்பியோடி தலைமறைவாகிவிட்ட கிம்டேவியை இன்று வரை கண்டுபிடிக்க முடியவில்லை. டெல்லியில் தனியார் விமானச் சரக்கு நிறுவனத்தை நடத்திவரும் ஜிதேந்தர் மற்றும் சுசீல் மல்கான் எனும் இரு வர்த்தகர்கள் இந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களது நிறுவனம் தான் இந்த விமானம் இந்தியாவில் பறக்க அனுமதி பெற்றுத் தந்துள்ளது. இவர்கள் தவிர அன்னிய நிதியுதவி பெற்று செயல்பட்டு வரும் மதவெறி பயங்கரவாத அமைப்பான ஆனந்த மார்க் இயக்கத்தைச் சேர்ந்த சிலர், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**சர்வதேச கிரிமினல் மா:.பியாக்களின் கைவரிசை**

புருலியா ஆயுத மழை விவகாரத்தில் சர்வதேச கிரிமினல் - மாஃபியா கும்பல்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக திடுக்கிடும் செய்திகள் வெளிவருகின்றன. ரஷிய ஒன்றியத்தில் முதலாளித்துவம் முழுமையாக நிறுவப்பட்ட பிறகு, அந்நாடுகளில் கிரிமினல் மாஃபியா கும்பல்களின் ஆதிக்கமும் நிலைநாட்டப்பட்டு விட்டது. ரஷ்யாவில் மட்டு 5000-க்கும் மேற்பட்ட கிரிமினல் கு பல் உள்ளதாக மேற்கத்திய பத்தி கைகளே அம்பலப்படுத்துகின்ற போதை மருந்து கடத்தல் வியா ரம், வங்கி மோசடி, ஆயுதக் கட தல், எண்ணெய் - உலோகங்க கடத்தல் வியாபாரம், அணு உலை ளுக்குத் தேவையான மூலக் கூறுக - தளவாடங்கள் கடத்தல் முதலா கொடிய குற்றங்களை இக்கும்ப கள் சர்வ சாதாரணமாகச் செய்து வ கின்றன. ஐந்தாண்டுகளுக்கு முன் பாகிஸ்தானில், ரஷியாவில் தயா


படிப்பகம்

www.padippakam.com




ஆயுத மழை சொரிந்த விமானத்திலிருந்து கைது செய்யப்பட்ட பீட்டர் பிளீச்; உள்ளே: தப்பியோடிவிட்ட கிம் டேவி.

கப்பட்ட ஏ.கே. 47 ரக துப்பாக்கி ரூ. 30,000-க்கு விற்கப்பட்டது. இன்று அது ரூ. 15,000-க்கு கிடைக்குமளவுக்கு கடத்தல் கொடிகட்டிப் பறக்கிறது. இந்தக் கிரிமினல் குற்றக் கும்பல்கள் முன்னாள் சோசலிச நாடுகளில் மட்டுமல்ல, பல வெளிநாடுகளுக்கும் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி பெரிய வலைப்பின்னல்களை உருவாக்கி இயங்கி வருவதைக் கண்டு உலக நாடுகள் அனைத்துமே பீதியடைந்துள்ளன. புருலியா ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டுள்ள கிரிமினல்கள் ரஷ்யாவிலிருந்து மேற்கே இங்கிலாந்து வரை, பாகிஸ்தான் - இந்தியா - தாய்லாந்து - ஹாங்காங் வழியே கிழக்கே நியூசிலாந்து வரை தமது வலைப்பின்னலை நிறுவியுள்ளனர் என்பது இப்போது நிரூபணமாகியுள்ளது.

**கிரிமினல் - கடத்தல் கும்பல்களின் சொர்க்கபுரியாக இந்தியா**

இத்தகைய சர்வதேச கிரிமினல் கும்பல்களின் கூட்டாளிகளான இந்திய மாஃபியாக்கள் புருலியாவில் ரகசியமாக ஆயுதங்களை இறக்கியிருக்கலாம். இந்தியாவில் அண்மைக் காலமாக கிரிமினல் - மாஃபியாக்களின் அட்டூழியங்கள் அதிகரித்து வருவதை நாடே நன்கறியும். ஏற்கனவே வடகிழக்கு மாநிலங்கள் போதை மருந்து கடத்தல் - நீலத்திரைப்பட மையமாக உள்ளது. சுயநிர்ணய உரிமைக்குப் போராடிவரும் இயக்கங்கள் இச்சீரழிவுகளுக்கு எதிராக தொடர்ச்சியாக போராட்டம் நடத்துமளவுக்கு அது தீவிரமாகியுள்ளது. தாய்லாந்து - மியன்மார் வழியே பாகிஸ்தானுக்கும் அங்கிருந்து மேலை நாடுகளுக்கும் போதை மருந்து கடத்தும் முக்கிய வழித்தடமாக இந்தியா உள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, ராவ் கும்பலின் கேடு கெட்ட ஆட்சியில் அந்நியச் செலாவணி மோசடி - பணக்கடத்தல் தொழில், ஆட்சியாளர்கள் - சர்வகட்சி அரசியல்வாதிகள், மாஃபியாக்களின் கூட்டோடு இந்தியாவில் கொடி கட்டிப் பறக்கிறது. ராவ் கும்பலின் ராஜகுருவாகிய சந்திராசாமி, ஆயுதக்கடத்தல் - பணக்கடத்தல் தரகன்தான்! புலிகளுக்காக இந்த ஆயுதங்கள் வந்திறங்கியதாகக் கூப்பாடு போடும் அரசியல் தரகன் சுப்பிரமணிய சாமி, சந்திராசாமியின் கூட்டாளி தான்! பம்பாய் ரகசிய உலகத்தை தாவூத் இப்ராகிமும், சோட்டா ராஜனும் வெளிநாடுகளில் தலைமறைவாக இருந்து கொண்டு இயக்குமளவுக்கு, கிரிமினல் - மாஃபியாக்களின் சர்வதேச வலைப்பின்னல் விரிவடைந்துள்ளது. இந்தப் பின்னணியில் சர்வதேச கிரிமினல் குற்றக் கும்பல்களின் துணையோடு இந்திய கடத்தல் மாஃபியாக்கள் புருலியாவில் ரகசியமாக ஆயுதங்களை இறக்கியிருக்க வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

> புருலியா சதி நடவடிக்கையை ஆட்சியாளர்களின் - போலீசு - ராணுவம் - உளவு நிறுவனங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாமல் ஒருக்காலும் நடத்தியிருக்கவே முடியாது.

**ஈழ அகதிக்குத் தடை! ஆயுதக் கடத்தலுக்கு தாராள அனுமதி**

வரலாறு கண்டிராத இம்மாபெரும் சதி நடவடிக்கையை ஆட்சியாளர்களின் - போலீசு - ராணுவம் - உளவு நிறுவனங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாமல் ஒருக்காலும் நடத்தியிருக்கவே முடியாது. ''இந்தியப் பாதுகாப்புத்துறையில் ஓட்டைகள் உள்ளது; கவனக் குறைவினால் இப்படி நேர்ந்து விட்டது'' என்று பூசிமெழுகி விடவும் முடியாது. ஈழத்தில் தொடரும் இனவெறியாட்டத்தால் பாதிக்கப்பட்ட ஒரு தமிழன் அகதியாக இந்தியாவுக்கு ஓடிவந்து விட்டால், ''ஐயோ! பயங்கரவாதி!'' என்று அலறும் இந்திய அரசு, அன்னிய கூலிப்படையினர் சர்வசாதாரணமாக விமானத்தில் வந்து ஆயுதங்களைச் சொரிந்து விட்டுப் போனதை கவனக் குறைவால் நடந்துவிட்டது என்று பசப்புவதை நாட்டு மக்களால் நம்பத்தான் முடியுமா? கேரளத்தில் மாலத்தீவு நாட்டைச் சேர்ந்த ரஷீதா என்ற பெண்மணி, இந்திய ஏவுகணைத்தள விஞ்ஞானிகளை மயக்கி சதி நடவடிக்கையில் ஈடுபட்டார் என்று பொய் குற்றம் சாட்டி, கைது செய்து பரபரப்பூட்டி, இப்போது அவரைக் குற்றமற்றவர் என்று விடுதலை செய்துள்ள இந்திய அரசு, ஆயுதங்களைப் போட்ட விமானம் மீண்டும் சுதந்திரமாக இந்தியாவில் பறந்து, அனுமதியின்றி சென்னையில் தரையிறங்கி எரிபொருள் நிரப்பிக் கொள்கிறதென்றால், இது பாதுகாப்பு ஏற்பாட்டிலுள்ள குறைபாடு என்று ஆட்சியாளர்கள் வாதிடுவதை யார்தான் நம்ப முடியும்?



படிப்பகம்

www.padippakam.com

## கசியும் உண்மைகள்

உண்மையில் இது, கிரிமினல் - மாஃபியா கொள்ளையர்களுடன் கள்ளக் கூட்டு சேர்ந்துள்ள இந்திய ஆட்சியாளர்களின் ஆதரவோடுதான் நடந்துள்ளது என்பதற்கு ஆதாரமாக சில தகவல்கள் மெதுவாகக் கசிந்துள்ளன.

★ காராச்சியில் இந்த விமானம் ஒரு மாதத்திற்கும் மேலாக நின்றிருந்த போதே சர்வதேச போலீசு அமைப்பு (இன்டர்போல்) இந்திய உளவு நிறுவனங்களுக்கு எச்சரிக்கை கொடுத்துள்ளது. ஆனாலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

★ ஆயுத மழை விவகாரத்துக்கு ஒரு வாரம் முன்னதாக ஒரு ''ரா'' உளவாளி பீகார் அரசிடம் ஆயுதம் இறங்கப் போவதாக தகவல் கொடுத்துள்ளார். ஆனாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

★ வாரணாசியில் இந்த விமானம் தரையிறங்கி புறப்படுமுன், இடைப்பட்ட நேரத்தில் சதிகாரர்கள் அருகிலுள்ள நட்சத்திர ஓட்டலில் ஓய்வெடுத்துள்ளனர். அந்த ஓட்டல் சமாஜ்வாடி கட்சிப் பிரமுகருக்குச் சொந்தமானது என்றும், இவரது செல்வாக்கினால்தான் உரிய அனுமதியில்லாத போதிலும் வாரணாசியில் இந்த விமானம் தரையிறங்கி எரிபொருள் நிரப்பிக் கொள்ள முடிந்தது என்றும் செய்திகள் கசிந்துள்ளன.

★ இதுபோலவே சென்னையில் இந்த விமானம் தரையிறங்கி எரிபொருள் நிரப்பிக் கொள்ள செல்வாக்குமிக்க ஒரு அரசியல் பிரமுகர் உதவினார் என்றும் தரையிறங்கிய இந்த விமானத்திலிருந்து ஒரு முக்கிய சதிகாரன் தப்பியோடி தலைமறைவாகி விட்டான் என்றும் கூறப்படுகிறது.

★ பம்பாயில் மற்றொரு சதிகாரனாகிய கிம்டேவி தப்பியோடுவதற்கு நகரிலுள்ள நகைக்கடை அதிபர்களும் ஹவாலா மன்னர்களும் உதவியதாகவும், ஒரு முன்னாள் காங்கிரசு மந்திரி, ஒரு எம்.எல்.ஏ. ஆகியோர் இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.

— இவற்றையெல்லாம் பூசி மெழுகிவிட்டு பாக். உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. மீது பழிபோட்டு ''ஐயோ சதி! நாட்டுக்கு ஆபத்து!'' என்று பெருங்கூச்சல் போடுகிறது ராவ் அரசு. ஆம்! நாட்டுக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது! அதுவும் அதிகாரத்திலுள்ள ராவ் கும்பலினால்! சர்வதேச ஆயுதக் கடத்தல் - கிரிமினல் குற்றக் கும்பல்களின் சொர்க்கபுரியாக இந்தியாவைச் சீரழித்துவிட்ட ராவ் கும்பலினால் நாட்டுக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது.

● மனோகரன்



புருலியாவில் கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்களுடன் இந்தியப் போலீசார்

# இந்தியாவின் அடாவடித்தனம் அம்பலப்பட்டுப் போனது!

பாசிச ராஜீவ் கொலைக்குப் பிறகு பயங்கரவாத பீதியூட்டி பாசிஸ்டுகள் பதவிக்கு வந்த நேரம் அது. புலிகளை ஆதரித்தவர்கள் - ஆதரிக்காதவர்கள் உட்பட ஈழ விடுதலை ஆதரவாளர்கள் அனைவரின் மீதும் பயங்கரவாத ''தடா'' சட்டமும் அடக்குமுறையும் ஏவப்பட்ட காலம் அது. தமிழகத்திலிருந்து ஈழ மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களோ, எரிபொருளோ சென்று விடாமல் கப்பற்படை மூலம் தடுத்தும், ஈழத்திலிருந்து தமிழகத்திற்குள் அகதிகள் நுழைந்து விடாமல் விரட்டியும் கொண்டிருந்த நேரம் அது. அப்போது — 1991-ம் ஆண்டு நவம்பர் 6-ம் நாளன்று புலிப்படையினர் பாங்காக்கிலிருந்து ஈழத்துக்கு உணவு மற்றும் எரிபொருட்களை தமது கப்பலில் ஏற்றி வந்து கொண்டிருந்தபோது, இந்தியக் கடல் எல்லைக்கு அப்பால் இந்தியக் கடற்படையினரால் இக்கப்பலும் அதனுடன் சேர்ந்த படகும் சுற்றி வளைக்கப்பட்டது. படகை குண்டுகளால் துளைத்து கடலில் மூழ்கடித்த இந்திய கடற்படை புலிகளின், ''டேங்கனோவா'' கப்பலையும் அதிலிருந்த போராளிகள் 9 பேரையும் இந்தியாவுக்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட சதி செய்ததாகக் குற்றம் சாட்டி ''தடா'' சட்டத்தின்கீழ் சிறையிலடைத்தது. புலிகளின் ''டேங்கனோவா'' கப்பலையும் அதிலிருந்த பொருட்களையும் விற்று ஏறத்தாழ 12 லட்ச ரூபாயை இந்திய அரசு கையகப்படுத்திக் கொண்டது.

இந்தியக் கடல் எல்லைக்கு அப்பால் சென்று கொண்டிருந்த புலிகளின் கப்பல் மீது இந்திய பாசிச ஆட்சியாளர்கள் நடத்திய இந்த அடாவடித்தனத்தை ஆதரித்து ''துக்ளக்'' சோ, சுப்பிரமணிய சாமி, காங்கிரசுக் கயவாளிகள் உள்ளிட்டு பார்ப்பன பத்திரிகைகள் அனைத்தும் பயங்கரவாத பீதியூட்டி நியாயப்படுத்தின.

ஏறத்தாழ நான்காண்டுகளுக்கும் மேலாக இவ்வழக்கை விசாரித்துவந்த ''தடா'' சிறப்பு நீதிமன்றம் கடந்த ஜனவரி 4-ம் தேதியன்று கைது செய்யப்பட்ட புலிகள் அனைவரும் நிரபராதிகள் என்று தீர்ப்பளித்து விடுதலை செய்துள்ளது. புலிகளின் கப்பல் இந்திய கடல் எல்லைக்குள் பயணம் செய்ததற்கான ஆதாரம் ஏதுமில்லை என்றும், இக்கப்பலில் ஈழ மக்களுக்கான உணவு மற்றும் எரிபொருட்களே இருந்துள்ளன என்றும், கப்பலில் இருந்தோர் பயங்கரவாத சதி நடவடிக்கையில் ஈடுபட்டதற்கான தடயமோ ஆதாரமோ இல்லையென்றும் கப்பலை விற்றதன் மூலம் கிடைத்த தொகையை அக்கப்பலின் தலைமை மாலுமியிடம் இந்திய அரசு ஒப்படைக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆழ்கடலிலும் இந்திய பாசிஸ்டுகள் ஆதிக்கமும் அடாவடித்தனமும் செய்து வருவதை இத்தீர்ப்பு அம்பலப்படுத்திக் காட்டியுள்ளதோடு, இந்தியக் கோய பல்சுகளின் முகத்திலும் கரி பூசியுள்ளது.

www.padippakam.com



# ஆபாசத்தை எதிர்த்துப் பெண்கள் நடத்திய புரட்சிகர போராட்டம்

தமிழக பெண்ணுரிமை இயக்கம் எனும் புரட்சிகர அமைப்பினர் அண்மைக்காலமாக நடத்திவரும் போராட்டங்களைக் கண்டு ஆணாதிக்க - ஆபாச - கிரிமினல் கும்பலும் போலீசும் பீதியில் உறைந்து போயுள்ளன.

கடந்த டிசம்பர் 18-ம் தேதியன்று மதுரை சிம்மக்கல்லில் உள்ள தீபா - ரூபா திரையரங்குகளில் ஆபாச - நீலப்படங்கள் தொடர்ந்து திரையிடப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த இந்த அமைப்பினர், சிறிது நேரத்தில் ஆவேசமாக அத்திரையரங்கில் நுழைந்து வெண் திரையைக் கிழத்தெறிந்தனர். அடுத்து, ''ஆபரேட்டர்'' அறைக்குள் நுழைந்து சினிமா காட்டும் ''புரொஜெக்டர்'' சாதனத்தை அடித்து நொறுக்கினர். ஆபாசத் திரைப்படச் சுருளையும் சுவரொட்டிகள் - படங்களையும் அள்ளிக் கொண்டு திரையரங்குக்கு வெளியே வந்து அவற்றை நடுவீதியில் போட்டு எரித்தனர். ஆபாசத்தை எதிர்த்துப் பொங்கியெழுந்து போராடிய இவர்கள் மீது அத்துமீறி நுழைதல், பொருட்களை சேதப்படுத்துதல் ஆகிய குற்றங்களைச் சுமத்தி போலீசார் கைது செய்து வழக்கு மன்றம் கொண்டு சென்றனர்.

இச்செய்தியறிந்து மதுரை நகர மக்கள் பெருந்திரளாக இவர்களைக் காண வழக்கு மன்றத்தில் குழுமிவிட்டனர். செயற்கரிய செயலைச் செய்த இவ்வமைப்பினருக்கு சட்டப்படி தண்டனை வழங்கிய போதிலும், பிணையில் செல்ல வாய்ப்புண்டு என்று நீதிபதி கூறவே, ஒன்றுக்கு பதினேழு வழக்கறிஞர்கள் இவ்வீராங்கனைகளை பிணையில் எடுத்தனர். ஆபாசத் திரைப்பட எரிப்புப் போராட்டம் மட்டுமல்ல; இதற்குமுன்பு பல்வேறு அதிரடி போராட்டங்களையும் இவ்வமைப்பினர் நடத்தியுள்ளனர்.

★ 1993-ல் போலீசுக்காரன் ஒருவன் விசாரணைக்கு வந்த பெண் மீது பாலியல் வன்முறையை ஏவிய வழக்கில், விசாரணை முடிவில்லாமல் இழுத்துக் கொண்டே போன போது அப்போலீசுக்காரனுக்கு செருப்பு மாலை அணிவித்து விளக்குமாற்றால் தருமஅடி கொடுத்தனர்.

★ காமவெறியன் பிரேமானந்தா மீது அழுகிய முட்டையும் செருப்பும் வீசி கீரனூர் வழக்குமன்றத்தில் அவமானப்படுத்தினர்.

★ மதுரையில் அழகிப் போட்டி நடத்துவதை எதிர்த்து மேடையிலேயே அழுகிய முட்டைகளை வீசிப் போராடினர்.

★ சென்னையில் நடைபாதைகளில் விற்கப்படும் ஆபாச புத்தகங்களை கட்டுகட்டாக பறிமுதல் செய்து கொளுத்தினர்.

பணபலமோ, அதிகார பலமோ இல்லாத போதிலும், போலீசும் ரவுடிகளும் எந்நேரமும் தாக்கலாம் என்ற நிலைமை இருந்த போதிலும் இவ்வமைப்பினர் நடத்தி வரும் போராட்டங்கள், புரட்சிகர இயக்கங்களுக்கு புதுரத்தம் பாய்ச்சுவதாக அமைந்துள்ளன.

---

சேது ஷூ கம்பெனி:

## பெண் தொழிலாளர்களின் போராட்டம்

வேலூரில் பெங்களூர் சாலையிலுள்ள மோட்டூர் பகுதியில் அமைந்திருக்கும் ஆர்.எஸ்.எல். எனும் தோல் தொழிற்சாலை (சேது ஷூ கம்பெனி), ராம்கோ குழுமத்தின் 4 தொழிற்சாலைகளில் பிரதானப் பிரிவு. இங்கு மட்டும் 800 பெண்கள் உட்பட 1000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இத்தொழிலாளர்களின் கடந்த 8 ஆண்டு கால கடின உழைப்பால், நிறுவனம் விருதுகளைக்கூட பெற்றுள்ளது. ஆனால் இத்தொழிலாளர்களின் நிலையோ சாதாரண அடிப்படை வசதிகளின்றி மோசமாகவே உள்ளது.

நேர வரையறையின்றி வேலை வாங்குகின்றனர். இரவு நேரப் பணியில் தாமதித்து வீட்டுக்கனுப்புவதால் பேருந்து கிடைக்காமல் பெண்கள் அவதிப்படுகின்றனர். மேலும் வாடி, போடி என்று அநாகரிகமாக பெண்களை அழைப்பது, விடுப்பெடுத்து மறுநாள் சென்றால், ''நேற்று எவன் கூட சென்றாய்?'' என்று கேட்பது மேலும் நாக்கூசும் வார்த்தைகளால் திட்டுவது தொழிற்சாலையில் சாதாரணமாக நடக்கிறது. இந்தக் கீழ்த்தரமான அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிர்வாகிகளுள் முக்கியமானவர் மேலாளர் சுகுமார்.

கடந்த டிசம்பர் மாதம் சம்பளத்தின் போது வீட்டு வாடகைப்படியாக ரூ. 30 மட்டுமே வழங்கி, பிற கோரிக்கைகளை எல்லாம் நிர்வாகம் புறக்கணித்தது. இதைக் கண்டித்து 9.12.95 அன்று அடையாள உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் முன்னணியாளர்களுள் ஆண்கள் 23 பேரைத் தற்காலிக வேலை நீக்கம் செய்தது, நிர்வாகம். இப்பழிவாங்கும் நடவடிக்கையைக் கண்டித்தும் 23 பேரை வேலைக்கு அழைக்கும்படியும் தொழிலாளர்கள் கேட்டதால் 16.12.95 முதல் தொழிற்சாலையை நிர்வாகம் இழுத்து மூடிவிட்டது. 23 பேரைத்தவிர மற்றவர்களை நிர்வாகம் வேலைக்கு அழைத்தும் சேப்பாக்கம் கர்னல் என்கிற ரவுடியை வைத்து வீடு சென்று மிரட்டியும், ஊர் சாதித் தலைவர்களை வைத்து சீர்குலைக்கவும் பல வழிகளை நிர்வாகம் மேற்கொண்டும் தொழிலாளர்கள் ஒற்றுமை குலையாது போராடி வருகின்றனர். 26.12.95 அன்று பட்டினிப் போராட்டம் நடத்தினர்.

தகவல்: சுந்தர்



படிப்பகம்

www.padippakam.com

# திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளை எதிர்த்து

திடீர்ப் பணக்கார அரசியல் ரவு களுக்கு எதிராகப் பிரச்சார இயக் த்தைக் கடந்த சில மாதங்களாக மக் ள் கலை இலக்கியக் கழகம், புரட்சி மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி கிய புரட்சிகர அமைப்புகள் டுத்து வருகின்றன. சுவரெழுத்து, வரொட்டி, தெருமுனைப் பிரச்சா ம், பொதுக்கூட்டம் போன்ற பல டிவங்களில் தொடர்ந்து எடுக்கப்ப ும் இவ்வியக்கம் மக்களிடையே ரவேற்பைப் பெற்று வருகிறது.

பென்னாகரம் பகுதி விவசாயிகள் விடுதலை முன்னணியின் சார்பாக ரியூர் பகுதியில் 24.12.95 அன்று பொதுக்கூட்டம் நடந்தது. வி.வி.மு. பட்டக்குழு உறுப்பினர் தோழர். வெங்கடேசன் தலைமை தாங்கி னார். தோழர்கள் ஆம்பள்ளி முனி ராஜ், இராசன், சிவகாமு ஆகியோர் உரை நிகழ்த்தினர். தோழர். மனோக ன் நன்றியுரையாற்றினார். ம.க. இ.க. கலைக்குழுவினரது நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது. பொதுமக்கள் 500 பேர்வரைத் திரண்டு ஆதரவளித்த னர். இப்பொதுக்கூட்டத்தை ஒட்டிப் பல பகுதிகளில் செய்யப்பட்ட தெரு முனைக் கூட்டப் பிரச்சாரத்திற்கும் 400 பேர் வரை ஆங்காங்கே கூடி ஆத ரித்தனர்.

திருச்சியில் உறையூர், புத்தூர், தாராநல்லூர், அரியமங்கலம் பகுதிக ளில் சுவரெழுத்துப் பிரச்சாரம் பரவ லாக மேற்கொள்ளப்பட்டது. திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடி களான அடைக்கலராசு எம்.பி., கே.ஏ.எஸ். இராம தாஸ் (லாட்டரி மோசடி மன் னன்), பால்வளத் தலைவர் இளவரசன், கள்ளச்சாராய ரவுடியும் அ.தி.மு.க. பிரமுக ருமான மரியம் பிச்சை, கந்து வட்டி பொன்மலை அலெக்ஸ், வேளாண்துறை அமைச்சர் கு.ப. கிருஷ்ணன் ஆகியோர் பெயரைக் குறிப் பிட்டு அம்பலப்படுத்தி இருந்தது மக்களிடையே வர வேற்பைப் பெற்றது.

துவாக்குடியில் 13.12.95 அன்று நடந்த பொதுக் கூட் டத்திற்கு பு.மா.இ.மு. தோழர். மாசானம் தலைமையேற்க, பு.மா. இ.மு. அரியமங்கலம் பகுதிச் செய லாளர் சத்யா, துவாக்குடி பகுதிச் செயலாளர் சேகர் ஆகியோர் சிறப்பு ரையாற்றினர். ம.க.இ.க. கலைக் குழு நடத்திய எழுச்சிகரமான கலை நிகழ்ச்சி கூடியிருந்த சுமார் 400 பேர் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றது. பொதுக்கூட்டத்தை யொட்டி தட்டிகள், சுவரொட்டி, பிர சுரம், வீடுவீடாக நிதிவசூல், ஆட்டோ பிரச்சாரம் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டன.

திரு.வி.க. நகரில் 16.12.95 அன்று நடந்த பொதுக்கூட்டத்திற் குத் தோழர் கிறிஸ்டி தலைமையேற் கத் தோழர்கள் சத்யா, சேகர் ஆகி யோர் உரையாற்றினர். ம.க.இ.க. தோழர். காளியப்பன் ஈழத்தமிழர் பிரச்சினை, ரஜினியின் அரசியல் பிர வேசம் போன்றவற்றோடு திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளை அம் பலப்படுத்திச் சிறப்புரையாற்றி னார். ம.க.இ.க.வின் கலை நிகழ்ச்சி யும் நடந்தது. 300-க்கும் மேற்பட்ட வர்கள் கூடி ஆதரித்தனர்.

உறையூரில் 19.12.95 அன்று ம.க.இ.க. திருச்சி பகுதி தோழர். கபி லன் தலைமையில் தோழர்கள். சேகர், தமிழ்மணி, காளியப்பன் ஆகி யோர் சிறப்புரையாற்றிய பொதுக் கூட்டம் நடந்தது. பொதுக்கூட்டத் திற்கு முன்பாகத் தட்டு வண்டியில் முழக்கத் தட்டிகளுடன் ஒலிபெ ருக்கி வைத்து தெருமுனைப் பிரச்சா ரம் மேற்கொள்ளப்பட்டது. மூன்று தோழர்கள் அரசியல்வாதி, ரவுடி, போலீசு போல் வேடமிட்டு, நடித் துக் காட்டி, மூவரின் (கள்ளக் கூட்டை), மக்கள் விரோத நடவடிக் கைகளை அம்பலப்படுத்தி ஊர்வல மாக வந்தனர். பொதுக்கூட்ட மேடையில் இவர்களின் தொல்லை தாங்காமல் மக்களே அடித்து விரட் டுவது போன்று நடித்துக் காட்டப் பட்டது. இது மக்களைப் பெரிதும் கவர்ந்து நல்ல ஆதரவை தேடித்தந் தது.

இதுபோன்ற வடிவத்தில், 28.12.95 அன்று பெரிய அளவில் திருச்சி காந்திபுரத்திலிருந்து தொடங்கி செந்தண்ணீர்புரம் பகுதி வரை ஊர்வலமாக நடித்துக் காட்டி போலீசு, அரசியல்வாதி, ரவுடிகளின் கூட்டை அம்பலப்படுத்தியதும் சிறந்த வரவேற்பைப் பெற்றது. சுமார் 60 தோழர்கள் இந்த நடைப்ப யண ஊர்வலத்தில் கலந்து கொள்ள தில்லைநகர், தென்னூர், காந்தி மார்க்கெட், பெரியகடை வீதி, தாரா நல்லூர், வரகனேரி, எடத்தெரு, சங் கிலியாண்டர்புரம் முதலிய பகுதிக ளில் முக்கியமான சுமார் 16 இடங்க ளில் தெருமுனைக் கூட்ட பிரச்சாரத் தையும் ஊர்வலத்துடன் இணைந்தே நடத்தினர். இப்பிரச்சார வடிவம் தோழர்களுக்கு உற்சாகத்தையும் மக் களுக்கு நம்பிக்கையையும் அளித்தது.

இராமகிருஷ்ணா தியேட்டர் அருகில் 30-12-95 அன்று நடந்த பொதுக் கூட்டத்திற்கு பு.மா.இ.மு. தோழர் ராஜா தலைமை தாங் கினார். பு.மா.இ.மு. தோழர் சத்யா, ம.க.இ.க. தோழர்கள் காளிப்பன், கபிலன்; வி.வி.மு. தோழர் ஆம்பள்ளி முனிராசு ஆகியோர் சிறப்பு ரையற்றினர். ம.க.இ.க. கலைக்குழு தோழர்களின் கலை நிகழ்ச்சி சிறந்த வர வேற்பைப் பெற்றது. 1000 பேர் அளவில் மக்கள் கூடி ஆதரித்தனர். பொதுக் கூட் டத்திற்காக வாமடம், வள்ளு வர்நகர் பகுதிகளில் தெருமு னைப் பிரச்சாரம் பரவலாக செய்யப்பட்டது.





படிப்பகம்

www.padippakam.com

# உயிரைப் பறிக்கும் உடனடி லாட்டரிகள்

## லாட்டரி அதிபர்களின் மோசடிகளைத் தமிழக அரசு கைகட்டி வேடிக்கைப் பார்க்கிறது

தீபாவளிப் பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்தது; திருச்சியில் பாய்லர் ஆலைத் தொழிலாளர்களின் குடியிருப்புகளில் உற்சாகமும் குதுகலமும் நிறைந்திருந்தது. மகிழ்ச்சிக்குக் காரணம் பண்டிகை மட்டுமல்ல; தொழிலாளர்களுக்குக் கிடைக்கவிருந்த சம்பள உயர்வு நிலுவைத் தொகையும் தான். அவ்வாலையைச் சேர்ந்த தொழிலாளி விசுவநாதனின் மனைவி சரசுவதியிடமோ உற்சாகத்திற்கும் குதுகலத்திற்கும் பதில் பதைபதைப்புதான் காணப் பட்டது. பணத்தை வாங்கிக் கொண்டு கணவன் நேராக வீட்டுக்குத் திரும்ப வேண்டுமே என்ற கவலை அவரது நெஞ்செங்கும் நிறைந்திருந்தது. சரசுவதி ''எது நடக்கக் கூடாது'' எனத் தனது கணவனிடம் மன்றாடினாரோ, அதுதான் நடந்தது. விசுவநாதன் தான் வாங்கிய முப்பதாயிரம் ரூபாயையும் ஒரே நாளில் சுரண்டல் பரிசுச்சீட்டில் தொலைத்துவிட்டு வீட்டிற்குத் திரும்பினார். கடன் தொல்லையும் பட்டினியால் வதங்கிப் போன குழந்தைகளும் சரசுவதியின் கண்முன் நிழலாடின. சென்ற ஆண்டின் அக்டோபர் மாத இறுதியில், மகளோடும், மகனோடும் தானும் தற்கொலை செய்து கொண்டு, வாழ்வை முடித்துக் கொண்டார், சரசுவதி.

● அதே அக்டோபர் மாதத்தில் வேலூர் நகர விடுதியொன்றில் பன்னீர் செல்வம் என்ற வியாபாரி மின் விசிறியில் தூக்கு போட்டுக் கொண்டு இறந்து போனார். சுரண்டல் பரிசுச் சீட்டிலும் ஒற்றை எண் பரிசுச் சீட்டிலும் பத்தாயிரக் கணக்கில் பணத்தை இழந்துபோனதுதான் அவரது தற்கொலைக்குக் காரணம்.

● மதுரையைச் சேர்ந்த பார்த்திபன் என்ற கூலித் தொழிலாளி இரண்டே மாதத்தில் சுரண்டல் பரிசுச்சீட்டு மோசடியில் 15,000 ரூபாயை இழந்து விட்டதாகத் தினமலர் நாளிதழுக்குக் கடிதம் எழுதியுள்ளார். குடி, குதிரைப்பந்தயம், சீட்டாட்டம் போல சுரண்டல் பரிசுச் சீட்டு, படித்தவன் - பாமரன் என்ற பேதமின்றி, உழைக்கும் மக்களின் குடும்பங்களைச் சூறையாடி வருகிறது. வருமானத்தையும் சொத்துபத்துக்களையும் மட்டுமின்றி நெருங்கிய உறவுகளையும் பறிகொடுத்துக் குடிமுழுகிப் போன குடும்பங்

ஒரே எண் கொண்ட நாகாலாந்து அரசு உடனடி பரிசுச் சீட்டுகள்




களைத் தமிழ்நாடெங்கும் இன்
ஏராளமாகக் காணலாம்.

தமிழகத்தில் மட்டும் 200 வி
மான சுரண்டல் பரிசுச் சீட்டுகள் வி
பனையாகின்றன. பரிசுச் சீட்டி
விலை ஒரு ரூபாய் என்றாலும், ஐ
பத்தைந்து ரூபாய் என்றாலும் தய
காது வாங்கி, தங்களது 'அதிருஷ்ட
தை' மீண்டும் மீண்டும் பரிசோதி
துப் பார்க்கின்றனர், பரிசுச்சீட்(
மோகிகள். தமிழ்நாடு அரசு சுரன்
டல் பரிசுச் சீட்டினை நேரடியா
நடத்தாவிட்டாலும், மணிப்பூர், நா
லாந்து, மிசோரம் போன்ற மாநி
அரசுகளின் சுரண்டல் பரிசுச்சீட்டுக்
ளைத் தமிழ்நாட்டில் விற்று
கொள்ள அனுமதித்துள்ளது. ( )ம்ம
நில அரசுகளும்கூட இப்பரிசுச் சீட
டினை நேரடியாக நடத்துவதில்லை
மதுரை கே.ஏ.எஸ்.சேகர், திருச்
இராமதாஸ், ஈரோடு கண்ணன்
போன்ற முதலைகளிடம் பண
தைப் பெற்றுக் கொண்டு, பரிசு
சீட்டு நடத்தும் உரிமையினை விற்
விடுகின்றன. அதன்பின் இம்மோ
டியில் இவர்களது இராச்சியம்தான்

குறிப்பிட்டுள்ள எண்ணிக்கை
யில் பரிசுச் சீட்டுக்களும், அவற்றில்
எண்களும் முறையாக அச்சிடப்படு
கின்றனவா என்பதைச் சோதிக்க
வும், பரிசு விழுவதைக் கண்காணிக்க
வும் எந்தவொரு வழிமுறையினை
யும் இம்மாநில அரசுகள் உருவாக்க
வில்லை; குலுக்கல் முடிந்து 90 நாட்
கள் வரை குறிப்பிட்ட சுரண்டல் பரி
சுச் சீட்டினை விற்றுக்கொள்ளவும்
சலுகை வழங்கப்பட்டுள்ளது. இந்த
ஓட்டைகளைப் பயன்படுத்திக்
கொண்டு அதிகாரிகளுக்கும் அமைச்
சர்களுக்கும் எலும்புத் துண்டுகளை
வீசிவிட்டு போலி பரிசுச் சீட்டுகளை
அச்சிட்டு விற்பனைக்குக் கொண்டு
வந்து விடுகிறது இம்மோசடிக் கும்
பல்.

கடந்த வருடம் செப்டம்பர்
மாதம் 28-ந் தேதி, விருதுநகர் அருகே
ஒரு கோடி ரூபாய் பெறுமான
போலி பரிசுச்சீட்டுக்களைக் கைப்
பற்றினர் வணிகவரித்துறை அதிகாரி
கள். இதுபற்றி ஒப்புக்காக விசா
ரணை ஒன்று நடந்தது. அதன்பின்,
''உரிய வரி கட்டிவிட்டதாக''க் கூறி
இப்போலி பரிசுச்சீட்டுக்களை விற்
பனைக்கு அனுமதித்து விட்டனர்,
அதிகாரிகள். சென்னை புளியந்
தோப்புப் பகுதியில், பரிசுச் சீட்டு
சில்லறை விற்பனைக் கடையொன்
றில், நாகலாந்து அரசின் அங்கீகாரம்
பெற்ற ''ஜீ-உடனடி'' எனும் பரிசுத்



படிப்பகம்

www.padippakam.com

...ிட்டத்தில், ''சி-832999'' என்ற எண்ணுள்ள பரிசுச்சீட்டுகள் 9-ம், ''சி-237999'' என்ற எண்ணுள்ள சீட்டுகள் 8-ம், சி-679999 என்ற எண்ணுள்ள சீட்டுகள் 4-ம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதைப் போன்று கன்னியாகுமரியில் நாகலாந்து அரசின் ''டாலர் - உடனடி'' என்ற திட்டத்தில் DD 560999 என்ற எண் கொண்ட பத்து போலி பரிசுச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இம்மோசடி பற்றி போலீசாரிடம் புகார் கொடுத்த பின்னும், பரிசுச் சீட்டுகளை நடத்திவரும் தாதுக் கும்பல்கள் கைது செய்யப்படவில்லை. கள்ள நோட்டு அச்சடிப்பதைவிட, போலி பரிசுச்சீட்டுகளை அச்சிட்டுக் கொள்ளையடிப்பது இன்று மிகவும் எளிதாய்ப் போனது.

மேலும், சுரண்டும் பரிசுச்சீட்டில் மறைக்கப்பட்டுள்ள எண்ணுள்ள பகுதியைச் சுரண்டாமலேயே, அப்பகுதியினை ''தின்னர்'' என்ற இரசாயனக் கலவையில் நனைத்து எடுத்து அச்சிடப்பட்டுள்ள எண்ணை அறிந்து கொள்ள முடியும்; பரிசுச்சீட்டுக் கடைகளில் குப்பையாகத் தரையில் கிடக்கும் சுரண்டல் பரிசுச்சீட்டுக்களை மொத்தமாக எடுத்துவந்து மீண்டும் அந்த எண்ணை மறைத்து விற்பனை செய்கிறார்கள் என்றும், இதற்கான இயந்திரங்கள் சிவகாசியில் இருப்பதாகவும் மதுரைப் பகுதியில் இருந்து செய்திகள் வெளிவருகின்றன.

இந்த மோசடிகளைக் குறிப்பிட்டுத்தான் கடந்த ஒரு வருடத்திற்கும் முன்னதாகச் சுரண்டல் மற்றும் ஒற்றை எண் பரிசுச்சீட்டுகளின் விற்பனையைத் தடை செய்தது, தமிழக அரசு. இடையிலே என்ன பேரம் நடந்ததோ, சுரண்டல் பரிசுச்சீட்டின் தடையினை நீக்கிவிட்டதோடு, இதனை நடத்த அரசுக்கு ஒட்டுமொத்த வரி (Compounding tax) கட்டினால் போதும் என்ற சலுகையினையும் வழங்கிவிட்டது, ஜெயா கும்பல். அருகிலுள்ள காவல் நிலையங்களுக்கு மாமூல் கட்டி விட்டு, கள்ளத்தனமாக ஒற்றை எண் பரிசுச்சீட்டு குலுக்கலைத் தமிழ்நாடெங்கும் நடத்தி வருகிறார்கள், பரிசுச் சீட்டு விற்பனையாளர்கள். இதற்காகப் பிற குலுக்கல் பரிசுச்சீட்டுகளையே விற்பனைக்குப் பயன்படுத்துவதோடு, குலுக்கல்களைத் தொலைபேசியின் மூலமே முடித்துக் கொண்டு விடுகிறார்கள்.

''ஒரே நொடியில் இலட்சாதிபதி ஆகலாம்; உல்லாசமாக வாழலாம்'' என்ற ஆசை வார்த்தைகளை அள்ளி வீசி, உழைக்கும் மக்களின் பலவீனங்களைப் பயன்படுத்தித் தங்களது பணப்பெட்டியை நிரப்பிக் கொள்ளுகின்றன இப்பரிசுச்சீட்டு முதலைகள். தனக்கும் வருமானம் வருகிறது என்பதற்காக இச்சீரழிவைச் சீராட்டி வளர்ப்பதோடு, இப்பகற்கொள்ளைக்குச் சட்டபூர்வ அங்கீகாரம் கொடுத்து வருகின்றன மைய-மாநில அரசுகள். ''ச்சீ.. நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு'' எனக் கோபக்கனல், நம் உள்ளத்தில் இந்தக் கொள்ளைக் கும்பலுக்கு எதிராகக் கனன்று வீச வேண்டும். மாறாக, ''யாரோ முட்டாள்தனமாக வாழ்ந்து தற்கொலை செய்து கொண்டார்கள்'' என ஒதுங்கிப் போனால், இம்மோசடி கும்பல், தனக்குத் தானே பட்டங்களைக் கொடுத்துக் கொண்டு ஊரை ஏமாற்றித் திரிவதையும், தனது பணபலத்தைக் கொண்டு அரசியல் செல்வாக்கினையும் அதிகாரத்தையும் விலைக்கு வாங்கித் தனது கிரிமினல் குற்றங்களை மூடி மறைத்து உல்லாசமாக வாழ்வதையும் ஒரு போதும் தடுத்து விட முடியாது.

● ரஹீம்

# சாதி - இன மோதலைத் தூண்டுவதா சமூக சேவை?

*கடந்த 15 டிசம்பர்'95 இதழில் ''தாழ்த்தப்பட்டவர் சாதி வெறிக்குப் பலி'' என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி ஒன்று வெளியிட்டிருந்தோம். நீலகிரி மாவட்டம் - உதகையில் வேற்காடு அண்ணாநகர் பகுதியில் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட சிறு மோதலைச் சாதிய - இன மோதலாகச் சித்தரித்துப் பெரிதுபடுத்துகிற இங்குள்ள அமைப்புகளுள் ஒன்றான ''மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம்'' என்ற தன்னார்வக் குழுவின் செய்தி அது. அகரம் சிவசுப்பிரமணியன் என்பவர் வெளிநாட்டு நிதிபெறும் இத்தன்னார்வக் குழுவைச் சேர்ந்தவர் என்பதைச் சோதிக்காமல் வெளியிட்ட தவறுக்குப் பெரிதும் வருந்துகிறோம். மற்றபடி தன்னார்வக் குழுவை நாம் ஆதரித்து எழுதவில்லை என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். இதுபோன்ற தன்னார்வக் குழுக்களையும், ஓட்டுச்சீட்டுக் கட்சிகளையும் எதிர்த்து அம்பலப்படுத்திவரும் ''விடுதலைக் கனல் - பகத் சிங் பேரவை'' யினரும் நமது பத்திரிகை வாசகர்களுமான சிலர் தொகுத்து அனுப்பியுள்ள செய்தியின் சுருக்கத்தை வெளியிடுகிறோம். இது உதகை வாழ் மக்களிடையே உள்ள முரண்பாட்டையும் பிரச்சினையின் தன்மையையும் சரியாகப் புரிந்து கொள்ள உதவும் என நம்புகிறோம்.*

**ஆசிரியர் குழு**

நீலகிரிப் பகுதியில் மக்களிடையே உள்ள முரண்பாடு, சமவெளிப் பகுதிகளில் உள்ள சாதிய முரண்பாடிலிருந்து வேறுபட்டது. இங்கு குறிப்பாக கோத்தகிரி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் வாழும் மக்களைப் படுகர்கள், இலங்கையிலிருந்து வந்து குடியேறிய தமிழர்கள், பூர்வீகக் குடிகளான ஆதிவாசிகள் என மூன்று பிரிவுகளாகக் குறிப்பிடலாம். பொருளாதாரம், கல்வி, அரசியல் மற்றும் சமூகரீதியாகப் படுகர்கள் வளர்ச்சியடைந்து மேல்நிலையில் உள்ளனர். ஆதிவாசிகள் மற்றும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களின் நிலையோ நேரெதிரானவை. இவர்களுள் பெரும்பான்மையினர் படுகர்களின் தேயிலைத் தோட்டங்களில் - தொழிற்சாலைகளில் கூலித் தொழிலாளர்களாகவே உள்ளனர்.

கோத்தர், தோடர், இருளர், குரும்பர், பனியர், முள்ளுக் குரும்பர் என்கிற 6 வகைப் பூர்வகுடி மலைவாழ் மக்கள் உள்ளனர். இதில் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் கோத்தர், தோடர் பிரிவினர் முதல், இரண்டாவது இடத்தை முறையே வகிக்கின்றனர். பிற பிரிவினரோ பின்தங்கியே உள்ளனர். ஆறு வகை ஆதிவாசி மக்களின் மொத்த மக்கள் தொகை சுமார் 33 ஆயிரமே. திப்பு சுல்தான் மைசூரை ஆண்ட காலத்தில் இவரது ஆட்சிக்குப் பயந்து வெளியேறிய கன்னடர்களில் நீலகிரியில் குடியேறியவர்கள் படுகர்கள்



படிப்பகம்

www.padippakam.com

என அழைக்கப்படுகின்றனர். கன்னடர்களில் உள்ள லிங்காயத்து மற்றும் தொரையர் சாதிப் பிரிவைச் சேர்ந்தவர்களான இவர்கள் மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்களில் பெரும்பாலும் கன்னடர்களின் தனித்தன்மையையே கடைபிடிக்கிறார்கள். கோத்தர், தோடர், இருளர் இனமக்களின் பழக்கவழக்கங்களில் பல வற்றை உள்வாங்கிக் கொண்டும் உள்ளனர். ஆனால், இவர்களுக்கு ஆதாவும், பாதுகாப்பும் அளித்த ஆதிவாசி மக்களின் கல்வியின்மை, பின் தங்கிய உற்பத்திமுறை போன்றவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு பொருளாதார ரீதியாக வளரத் தொடங்கினர். ஆதிவாசிகளின் நிலங்கள், பல படுகர்களின் கைக்கு மாறின.

நாளடைவில் படுகர்களிடையே இனவாதக் கோரிக்கைகள் எழுந்தன. பிற்படுத்தப்பட்ட பட்டியலிலிருந்து தங்களை ஆதிவாசிகளுக்குரிய பட்டியலுக்கு மாற்றும்படி கோரினர். தொடக்கத்தில் காங்கிரசு அரசு இவர்களை ஆதிவாசிப் பட்டியலில் சேர்க்க முடிவு செய்த போது இவர்களின் தலைவர்கள் பலரே (குறிப்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. மாதாகவுடர்) எதிர்ப்பு தெரிவித்து, ''படுகர்கள் உயர்சாதியினராவர்; எங்களை ஆதிவாசி பட்டியலில் சேர்த்தால் இழுக்கு'' என்று கூறித் தடுத்தனர். 1984-க்குப் பின்பு படுகர்களிடையே மீண்டும் இக்கோரிக்கை எழுந்து தீவிரமடைந்து வருகிறது. இதற்குத் தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகளே முக்கிய காரணமாகும்.

நீலகிரியில் உள்ள ''இலங்கைத் தமிழர்கள்'', சிறீமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ், இலங்கையின் மலையகப் பகுதியிலிருந்து தாயகம் திரும்பிய இந்திய வம்சாவழித் தமிழர்களாவர். இவர்களிடையே சமூக சேவை என்ற பெயரில் சிலவற்றைச் செய்து செல்வாக்குப் பெற்றுள்ள ''மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம்'' (இதன் கீழ் மாதர்களுக்கு, இளைஞர்களுக்கு, தொழிலாளர்களுக்கு எனப் பல அமைப்புகள் உள்ளன) கிறித்துவ சேசு சபையின் பின்னணியில் வெளிநாட்டு நிதி பெற்று இயங்கி வரும் தன்னார்வக் குழுவாகும். இலங்கையைச் சேர்ந்த இதன் இயக்குனர் இரா. சிவலிங்கமும் தலைவர் திருச்செந்தூரனும் இந்தியக் குடியுரிமை பெற்றவர்கள் அல்லர். 93-ம் வருடம் நீலகிரியில் கலவரத்தைத் தூண்டும் வகையில் செயல்பட்டதாக சிவலிங்கம் கைது செய்யப்பட்டுச் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் 6 மாத காலம் சிறை வைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் சிறீமாவோ பண்டாரநாயகாவுக்கு நெருக்கமாக இருந்து, கல்வித்துறை இயக்குநர் பதவி பெற்றவர். யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவதை எதிர்த்தனர். இவரும் செந்தூரனும் மார்க்சிய விரோதிகளும், அந்நியர்களுக்குச் சேவை செய்யும் மக்கள் விரோதிகளுமாவர்.

நீலகிரிக்கு வந்து குடியமர்ந்த இலங்கை மலையகத் தமிழர்கள் சுமார் 3 லட்சம் பேரில் மூன்றில் ஒரு பாகத்தினர் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம் (TANTEA) என்ற அரசு நிறுவனத் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள். எஞ்சியவர்களில் ஏறக்குறை 1.5 லட்சம் பேர் நிலபிரபுத்துவ - பணக்கார - நடுத்தர - சிறு விவசாயிகளாக உள்ள படுகர்களின் தேயிலைத் தோட்டங்களில் கூலி வேலை செய்து வருகின்றனர். தாயகம் திரும்பிய தமிழர்களின் கடின உழைப்பால்தான் தேயிலைப் பயிர் உற்பத்தி அசுர வளர்ச்சியடைந்தது. ஆனால் குறைவான கூலி காரணமாக இவர்களின் வாழ்நிலையோ மிகவும் பின்தங்கியுள்ளது. படுகர் கிராமங்களின் அருகில் உள்ள புறம்போக்கு நிலங்களில்தான் தாயகத் தமிழர்கள் வசிக்கிறார்கள். இப்பகுதிகள் ''காலனிகள்'' என்றே அழைக்கப்படுகின்றன. சாலை, மின்சாரம், தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் இங்கு இல்லை. படுகர்களின் வாழ்நிலையோ, குடியிருப்புகளோ இதற்கு நேர்மாறாக உள்ளன. இதைப் பயன்படுத்தி மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் இனப் பகைமையைத் தூண்டி ஆதாயமடைந்து வருகின்றது.

1984-க்கு முன்பாக தமிழர்களுக்கும் படுகர்களுக்கும் சிறுசிறு மோதல்கள் நடந்திருந்தாலும் அவை கிராம அளவில் முடிந்துவிடும். ஆனால் இந்த பத்தாண்டுகளில் தான் இன மோதல், அமைப்பு ரீதியாகப் பரவலாக நடைபெற்று வருகிறது. இதற்கு தாயகத் தமிழர்கள் மத்தியில் செயல்படும் மறுவாழ்வு மன்றமும் படுகர்கள் மத்தியில் செயல்படும் தன்னார்வ குழுக்களான ஹெச். என். கல்லா கவுடர் தலைமையிலான ''ஆதிவாசிகள் சக்தி''யும் என். எம். போஜ்குமார் தலைமையிலான ''நீலகிரி ஆதிவாசிகள் சக்தி''யும்

காரணங்களாக உள்ளன. இல
இனப் பகைமையோடு எழுதி
பேசியும், மோதலை இரு பிரிவி
டையே தூண்டி வருகின்றன. அந்
நிறுவனங்கள் தலித் மக்களைத் தி
டவே தற்போது அதிகப் பண
ஒதுக்கி வருவதால் இப்பிரச்சினை
குச் சாதிய சாயம் பூசி ஆதா
டைந்து வருகிறது, மறுவாழ்வு ம
றம். இவற்றின் காரணமாக அ
திற்குள்ளாகியுள்ள 6 வகைப் பூர்
ஆதிவாசி மக்கள் மத்தியில் ''நீல
ஆதிவாசிகள் நலச்சங்கம்'', ''நீல
ஆதிவாசிகள் சங்கம் (NAS)'' என
தன்னார்வக் குழுக்கள் தலையெ
துச் செயல்படத் தொடங்கியுள்ள
படுகர்களை ஆதிவாசிப் பட்ட
லில் சேர்க்கக் கூடாது என இவ்
மைப்புகளும் மறுவாழ்வு மன்
தைப் போலவே எதிர்ப்பு தெரிவ
கின்றன. ஆதிவாசிகளுக்
சுயாட்சி வழங்கவேண்டும் என்று
என்.ஏ.எஸ். கோருகிறது.

அரசியல் கட்சிகளில் சி.பி.
படுகர்களின் கோரிக்கையை ஆ
ரித்து நிற்கிறது. பா.ம.க, தாயகத் த
ழர்கள் பக்கம் நின்று படுகர்கள்
கோரிக்கையை எதிர்த்தும், ''ஆதி
சிகள் சக்தி'' அமைப்பைத் தடை
செய்யக் கோரியும் நவம்.28-ல் இ
மதாசு தலைமையில் ஆர்ப்பாட்ட
நடத்தியுள்ளது. காங்கிரசு, அ.
மு.க., தி.மு.க., ம.தி.மு.க. மௌ
மாகவும் இரட்டை வேடம் போ
டுக் கொண்டும் உள்ளன. இக்கட்
ளில் உள்ள சில தமிழினவாதிக
கட்சி சார்பாக நேரடியாக இறங்
மல் மறுவாழ்வு மன்றத்தை ஆதரி
உற்சாகப்படுத்துகின்றனர். தமிழ்
வெறியர்கள் சிலர் கன்னடர்க
வெளியேறவேண்டும் போ
கோரிக்கைகளையும் வைத்துள்
ளர்.

பூர்வீகக் குடிகளான ஆ
வகைப் பழங்குடி மரபினர் ஆதி
சிப் பிரிவுப் பட்டியலின் கீழ் பட
பெறுவது சரியானது. மற்றபடி தா
கத் தமிழர்களுக்கும், படுகர்களு
கும் இடையே உள்ள சிறு முர
பாட்டைப் பெரிதாக்குகிற தன்ன
வக் குழுக்களையும் ஓட்டுக்கட்
ளையும் புறக்கணித்து அனைத்து
பிரிவு கூலித் தொழிலாளர்களு
படுக விவசாயிகளும் ஒன்றிணை
நிலபிரபுத்துவ முறையில் பொரு
தார, சமூக ரீதியான ஆதிக்கம் புரி
சில படுகர்களை எதிர்த்து
போராடி முறியடிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



## முதலாளித்துவத்தின் மகிமை: பட்ஜெட் இழுபறியால் அமெரிக்க அரசு முடங்கியது

மிகப்பெரிய வல்லரசு நாடான அமெரிக்காவில் பட்ஜெட் இழுபறி காரணமாக, கடந்த ஒரு மாத காலமாக அரசே செயல்பட முடியாமல் வரலாறு காணாத வகையில் முடங்கிப் போயுள்ளது. அரசு அலுவலகங்கள் மூடப்பட்டு ஏறத்தாழ 3 லட்சம் அரசு ஊழியர்கள் வேலையில்லாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கின்றனர். 5 லட்சம் அத்தியாவசியப் பணித்துறை ஊழியர்கள் இன்னமும் சம்பளம் வாங்காமல் வேலை செய்து கொண்டிருக்கின்றனர். இந்த அநியாய அராஜகத்தை எதிர்த்து அரசு ஊழியர்கள் பேரணி, ஆர்ப்பாட்டம் என போராட்டங்களைத் தொடருகின்றனர்.

அமெரிக்காவில் அதிபருக்கும் நாடாளுமன்றத்துக்கும் ஏறத்தாழ சம அதிகாரம் உள்ளது. அதிபரின் ஒத்துழைப்பின்றி நாடாளுமன்றமும், நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பின்றி அதிபரும் எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த முடியாது. அதிபர் கிளிண்டன் ஜனநாயகக் கட்சியின் சார்பில் தேர்வு செய்யப்பட்டவர். ஆனால் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி பெரும்பான்மையாக உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் பற்றாக்குறை ஏற்படுவதால், அடுத்த ஏழாண்டுகளில் பற்றாக்குறை இல்லாத நிலையை ஏற்படுத்தும் நோக்கத்தோடு குடியரசுக் கட்சி ஒரு திட்ட முன்மொழிதலைக் கொண்டு வந்தது. பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரியிலிருந்து, சமூக நலத்திட்டங்களுக்கும் மானியங்களுக்கும் செலவிடுவது வீண் விரயமாகும்; எனவே சமூக நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளைக் குறைக்கவேண்டும் என்கிறது குடியரசுக் கட்சி. இப்படிச் செய்தால், கவர்ச்சித் திட்டங்கள் முடங்கி, மக்களிடம் ஆதரவு குறைந்துவிடும் என்று அஞ்சி அதிபர் கிளிண்டன் இத்திட்டத்தை எதிர்க்கிறார். இதனால் இழுபறி நிலை ஏற்பட்டு, ஆண்டுதோறும் போடப்படும் பட்ஜெட் இம்முறை திரிசங்கு நிலையில் சிக்கிக் கொண்டுள்ளது. பட்ஜெட் நிறைவேறாததால் அரசு கருவூலத்திலிருந்து பணம் எடுக்க முடியாமல், அலுவலகங்கள் மூடப்பட்டன. ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும் முடியவில்லை. இப்பிரச்சினையைத் தீர்க்க கிளிண்டனும் குடியரசுக் கட்சியினரும் பலமுறை பேச்சு வார்த்தை நடத்திய போதிலும் எந்த முடிவும் ஏற்படவில்லை. இருதாப்பும் ஒன்றையொன்று பழிதூற்றிக் கொண்டு முதலாளித்துவ நாடாளுமன்ற அராஜகத்தை நாறடித்து வருகின்றன. உண்மையில், இவ்விரு தாப்புகளுக்குமிடையே அடிப்படைக் கொள்கையில் வேறுபாடு ஏதும் கிடையாது. சமூக நலத் திட்டங்களைக் கைவிட்டு மக்கள் தலையில் எப்படி மிளகாய் அரைப்பது என்கிற அணுகுமுறையில் மட்டுமே அவை வேறுபட்டு மோதிக் கொள்கின்றன. அதேசமயம் நாட்டுநலன், மக்கள் நலன் என்ற பெயரில் அவை வேடங்கட்டி ஆடும் ஆட்டம், அராஜகமாக முற்றி முதலாளித்துவ ஜனநாயகத்தின் யோக்கியதையையே சந்திசிரிக்க வைத்துவிட்டது.

## "இது ஊழல் அரசுதான்!" 'மார்க்சிஸ்டு' அமைச்சர் ஒப்புதல்

மே. வங்க 'மார்க்சிஸ்டு' அரசின் மூத்த அமைச்சரும், அக்கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினருமான பினாய் சவுத்திரி, "மே.வங்க அரசை காண்டிராக்டர்கள் (ஒப்பந்தக்காரர்கள்) ஏலத்தில் எடுத்து நடத்துகின்றனர்" என்று வெளிப்படையாகச் சாடியுள்ளார். கடந்த டிசம்பர் 17-ந் தேதியன்று பர்துவான் நகரில் நடந்த ஒரு கருத்தரங்கில் அவர் பேசிய போது, "இந்த அரசு காண்டிராக்டர்களுக்காக, காண்டிராக்டர்களால் நடத்தப்படும் காண்டிராக்டர்களின் அரசாக மாறிவிட்டது" என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.



ஊழல் நாறும் தாளாமல் புலம்பிய 'மார்க்சிஸ்டு' அமைச்சர் பினாய் சௌத்திரி.

86 வயதான பினாய் சவுத்திரி, கடந்த 18 ஆண்டுகளாக மே.வங்க 'இடது முன்னணி' அரசின் நிலச்சீர்திருத்த அமைச்சராகச் செயல்பட்டு வருபவர். "மே. வங்கத்தில் ஊழல் பெருத்துவிட்டது; நேர்மையானவர்களையும் ஊழல் பெருச்சாளிகளையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு லஞ்சமும் ஊழலும் எங்கும் நீக்கமற நிறைந்து உள்ளது. நாம் எல்லோருமே ஊழல் பேர்வழிகளாக இருக்கும் போது, மற்றவர்கள் மீது குற்றம் சாட்டுவதில் என்ன பயன்?" என்று அவர் வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

முன்பு இதேபோல, திரிபுராவின் மூத்த 'மார்க்சிஸ்டு' தலைவரான நிருபன் சக்ரவர்த்தி, 'இடது முன்னணி' அரசையும் குறிப்பாக, ஜோதிபாசுவின் ஊழல்களையும் அம்பலப்படுத்திச் சாடினார். அதற்காக அவரைக் கட்சியிலிருந்தே வெளியேற்றிய 'மார்க்சிஸ்டுகள்', இப்போது இன்னுமொரு மூத்த தலைவரான பினாய் சவுத்திரியும் தமது ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்துவதைக் கண்டு பீதியில் உறைந்து போயுள்ளனர். "அவர் மத்தியிலுள்ள காங்கிரசு அரசைத்தான் அப்படி குற்றம் சாட்டினார்; பத்திரிகைகள் தவறாக எழுதியுள்ளன" என்று போலிகள் மழுப்பி வருவதோடு, பினாய் சவுத்திரியைச் சரிகட்டி வாயடைத்துள்ளனர். ஆனால், போலிகள் செய்துவரும் தகிடுதத்தங்களே அவர்களது யோக்கியதையை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டன.



படிப்பகம்

www.padippakam.com



## இந்து வெறியர்களின் 'சுதேசி' முகமூடி கிழிந்தது

மகாராஷ்டிராவில் 4 மாதங்களுக்கு முன்பு, அமெரிக்காவின் என்ரான் மின்திட்டத்தை எதிர்த்து தேர்தல் பிரச்சாரம் செய்து ஆட்சிக்கு வந்த இந்து வெறியர்கள், இப்போது அதே என்ரானுடன் மறு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். சுதேசி - ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஊழல் கொள்ளையர்களைத் தண்டிப்பது என்று சவடால் அடித்த இந்து வெறியர்கள் இப்போது எண்சாண்கிடையாக ஏகாதிபத்தியங்களின் காலில் விழுந்து கிடக்கின்றனர். குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிற கதையாக, தங்களது புதிய ஒப்பந்தத்தால் இன்னும் 20 ஆண்டுகளில் 25 ஆயிரம் கோடி ரூபாய் மிச்சமாகும் என்று மாய்மாலம் செய்து வருகின்றனர்.

என்ரானுடன் பாரதீய ஜனதா - சிவசேனா கூட்டணி அரசு போட்டுள்ள புதிய ஒப்பந்தப்படி, மின் உற்பத்திக்கான எரிபொருள் ஏகாதிபத்தியங்களிடமிருந்து இறக்குமதி செய்யப்படும். இதனால் ஏராளமான அந்நியச் செலாவணி இழப்பு ஏற்பட்டு, மின் கட்டணம் மேலும் அதிகமாகும். மேலும், மின்னுற்பத்தி திட்டத்திற்கான செலவு டாலர் மதிப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. ரூபாயின் மதிப்பு செல்லாக் காசாகி டாலர் மதிப்பு உயர்ந்து கொண்டே போகும் நிலையில், திட்டச் செலவுகள் மேலும் அதிகரிக்கவே செய்யும். முந்தைய சரத்பவார் அரசு ஒரு யூனிட்டுக்கு ரூ. 2.40 வீதம் 1998 முதலாக அமுல்படுத்துவதாகக் கூறியது. ஆனால் இந்து வெறியர்களின் அரசு இப்போதிலிருந்தே ரூ 1.86 வீதம் கட்டணம் வசூலிக்கப் போகிறது. நாளும் உயரும் விலைவாசியுடன் ஒப்பிட்டால் இது 1998-ல் ரூ. 2.40-ஐ விட அதிகரிக்கவே செய்யும். திட்டச் செலவில் எரிவாயு தொடர்பான ரூ. 2000 கோடி செலவை தனியே பிரித்து, திட்டச் செலவை குறைத்துக் காட்டி இந்துவெறியர்கள் மாய்மாலம் செய்கின்றனர். அடுத்த பத்தாண்டுகளில் எரிபொருள் செலவு மட்டும் 50 ஆயிரம் கோடியாகிவிடும். மேலும் என்ரான் தயாரிக்கும் மின்சாரத்தில் 90% அளவுக்கு மகாராஷ்டிரா மின்சார வாரியம் வாங்கிக் கொள்ளும் என்று ஒப்பந்தத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. என்ரானைவிட மலிவாக மின்சாரம் தயாரிக்க வாய்ப்பிருந்த போதிலும், மேலும் கூடுதல் விலைக்கு என்ரானிடம் மின்சாரம் வாங்குவதன் மூலம் இந்துவெறி ஆட்சியாளர்கள் நாட்டை நட்டத்தில் தள்ளியுள்ளனர்.

என்ரான் திட்டத்தை ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவிடம், என்ரானைத் தவிர வேறு நிறுவனத்தின் உதவியுடன் செலவு குறைவாக மின் உற்பத்தி செய்ய முடியுமா என்று ஆராய ஒப்படைக்கப்படவில்லை. என்ரானுடன் மறுபேரம் நடத்தும் நோக்கத்துடன்தான் இந்துவெறி ஆட்சியாளர்கள் இக்குழுவை நியமித்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக, என்ரான் திட்டத்தில் ஊழல் நடந்துள்ளதாக முந்தைய சரத்பவார் அரசு மீது குற்றம்சாட்டிய இந்து வெறியர்கள், இப்போது அதுபற்றி வாய் திறப்பதில்லை. புதிய ஒப்பந்தத்தின் மூலம் தங்களது ஊழல் கொள்ளையை எதிர்க் கட்சிகள் கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக இப்படியொரு ஏற்பாட்டைச் செய்துள்ளனர்.

## பகடைக் காய்களாகிப் பரிதவிக்கும் சாக்மா அகதிகள்

வங்க தேசத்திலிருந்த அகதிகளாக வந்த சாக்மா மக்கள் வட கிழக்கிந்திய மாநிலங்களில் சொல்லொணா துயரத்தில் சிக்கித் தவிக்கிறார்கள். திரிபுரா, மிஜோரம், அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சாக்மா மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவெறித் தாக்குதலால், அவர்கள் நாளும் தமது உயிரையும் உடமைகளையும் இழந்து பரிதவிக்கிறார்கள்.

பாசிச இந்திரா ஆட்சியில் 'வங்கதேச விடுதலை' என்ற பெயரில் இந்தியா ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்திய போது, சிட்டகாங் மலைப் பிரதேசத்தைச் சேர்ந்த சாக்மா மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு ஓடி வந்தனர். அவர்களைப் பகடைக் காய்களாக்கி வங்க தேச அரசுக்கு நிர்பந்தங்கள் கொடுத்து பணியவைப்பதை இந்திய ஆட்சியாளர்கள் நீண்டகாலமாகவே தமது விரிவாக்கக் கொள்கையாகக் கொண்டுள்ளனர். அதே சமயம் சாக்மா அகதிகளோ வட கிழக்கிந்திய மாநிலங்களில் சேரிகளை விடக் கேவலமான முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.



அருணாச்சல பிரதேசத்தில் குடியிருப்புகளுக்குத் தீ வைத்து சாக்மா மக்களை விரட்டும் அட்டூழியம்

அகதிகளாக வந்தவர்கள் ஒருபுறமிருக்க, ஐந்து தலைமுறைக்கு முன்பாக, வடகிழக்கு மாநிலங்களில் குடியேறிய சாக்மா மக்களும் கணிசமாக உள்ளனர். அருணாச்சல பிரதேசம், மிஜோரம் மாநிலங்களில் குடியேறி பல்கிப் பெருகிய இம்மக்கள் இன்று ஏறத்தாழ ஒரு லட்சம் பேராக உள்ளனர். இவர்களுக்கு குடியுரிமையும் வாக்குரிமையும் அளித்து தமது ஓட்டு வங்கியாக காங்கிரசு ஆட்சியாளர்கள் பயன்படுத்தி வந்தனர். காலப் போக்கில் அகதிகளையும் முறைகேடாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கத் தொடங்கினர். இதனால் யார் அகதி, யார் குடியுரிமை பெற்றவர் என்று இனங்காண முடியாத நிலை ஏற்பட்டு அதுவே இனவெறிக்கு அடிப்படையாகியது.

www.padippakam.com



வடகிழக்கு மாநிலங்கள் தொடர்ந்து மத்திய அரசால் புறக்கணிக்கப்படுவதைத் திசைதிருப்பவும், சுய நிர்ணய உரிமைக்கான போராளி அமைப்புகளின் பக்கம் மக்கள் திரளுவதைத் தடுக்கவும் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் இப்போது இனவெறியைத் தூண்டிவிட்டுக் குளிர் காய்கின்றன. ''அந்நியர்''களான சாக்மா மக்களாலேயே தமது உரிமைகள் பறிக்கப்படுவதாகவும் அவர்களைக் கட்டாயமாக வெறியேற்றக் கோரியும் போராட்டங்களை நடத்தி வந்த ஓட்டுக்கட்சிகள், அண்மைக்காலமாக சாக்மா மக்கள் மீது இனவெறித் தாக்குதல்களை ஏவி வருகின்றன. சாக்மா குடியிருப்புகளைத் தீயிட்டுக் கொளுத்துவது, பாலியல் வன்முறையை ஏவுவது, கும்பலாகச் சென்று வெட்டிக் கொல்வது என இனவெறிக் காட்டுமிராண்டித் தாக்குதல்கள் தொடர்கின்றன. மிஜோராம், அருணாச்சல பிரதேசத்தில் 1995 டிசம்பர் 31-ந் தேதிக்குள் சாக்மா மக்கள் வெளியேறாவிட்டால் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவோம் என்று எல்லா ஓட்டுக் கட்சிகளும் பகிரங்கமாகவே எச்சரித்துள்ளன. இக்கலவரங்களைத் தூண்டிவிட்டு குளிர்காயும் காங்கிரசுக் கயவாளிகள், மறுபுறம் அகதிகளின் கட்டாய வெளியேற்றத்துக்கு உச்ச நீதிமன்றன் மூலம் இடைக்கால தடை விதித்து ஜனநாயக நாடக மாடுகின்றனர்.

நான்கைந்து தலைமுறைக்கு முன்பு இந்தியாவில் குடியேறி இம்மண்ணில் உழைத்து வளப்படுத்திய சாக்மா, நேபாளிகள், பூடானியர்கள், மியான்மாரிகள் முதலான சிறுபான்மை மக்களை 'அந்நியர்கள்' என இனவெறியூட்டி விரட்டுவது மனித நாகரீகத்துக்கே எதிரானது. அதைவிட, அகதிகளாக வந்த சாக்மா மக்கள் மீது இனவெறித் தாக்குதல் நடத்துவது மனித உரிமைக்கே எதிரானது. ஆனாலும், இனவெறியைக் கட்டவிழ்த்து விட்டு சாக்மா மக்களின் பிணங்களின் மீதேறி ஆட்சிய திகாரத்தைச் சுவைக்க காங்கிரசு பாசிஸ்டுகள் கிளம்பி விட்டதையே நிலைமைகள் உணர்த்துகின்றன.



போலீசார் தாக்குதலைத் தடுக்க
டயர்களை எரித்து போராடும் நகரில் ஆர்ப்பாட்டம்

## பிரிட்டனில் தொடரும் நிறவெறிக் கொடூரம்

ஏகாதிபத்திய நாடான பிரிட்டனில் கடந்த டிசம்பர் மாதத்தில் நடந்த ஆர்ப்பாட்டங்களும் கலவரங்களும் அந்நாட்டின் நிறவெறிக் காட்டு மிராண்டித்தனத்தை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது. லண்டன் மாநகரத்தின் தெற்கேயுள்ள நகரமான பிரிக்ஸ்டனில், ஒரு கறுப்பின இளைஞன், ஒரு கடையில் கொஞ்சம் ரொட்டியைத் திருடியதற்காக போலீசார் அவனைக் கைது செய்து மிருகத்தனமாக தாக்கினர். போலீசு கொட்டடியில் அந்த இளைஞன் மாண்டு போனான். இவ்வாண்டில் கறுப்பினத்தவர் போலீசு கொட்டடியில் மாண்டு போயிருப்பது இது இரண்டாவது முறையாகும்.

இப்படுகொலையை எதிர்த்து டிசம்பர் 13-ம் நாளன்று வெள்ளையர் உள்ளிட்டு, ஆயிரக்கணக்கான கறுப்பின மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். பின்னர் அது போலீசாருடன் நேரடி மோதலாகத் தீவிரமடைந்து, கடைகள் சூறையாடப்பட்டு வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டு பெரும் கலவரமாகிறது.

பிரிக்ஸ்டன் நகரிலும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளிலும் கறுப்பின - கரீபிய மக்கள் பெருமளவில் வாழ்கின்றனர். நிறப்பாகுபாடு காரணமாக, இப்பகுதியில் அடிப்படை வசதிகள் கூட புறக்கணிக்கப்பட்டு, மிகவும் ஏழ்மையான பின்தங்கிய நிலையிலேயே இருத்தி வைக்கப்பட்டுள்ளது. லண்டன் மாநகரை ஒப்பிடும்போது இங்கு வேலையின்மை 3 மடங்கு அதிகமாகவே உள்ளது. ஏற்கனவே 1981-இல் பிரிக்ஸ்டனில் நிற-இன ஒடுக்குமுறைக்கு எதிராக மாபெரும் கிளர்ச்சியும் கலவரமும் நடந்துள்ளது. அதன் பிறகு வெள்ளையர்கள் அப்பகுதியில் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளப் போவதாக அறிவித்தும் கூட, இன்றுவரை எதையும் நடைமுறைப் படுத்தவில்லை. அதேசமயம், 1987லிருந்து இன்றுவரை 70 கறுப்பினத்தவர்கள் போலீசு கொட்டடியில் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் எந்தவொரு வெள்ளையின போலீசு அதிகாரியோ சிறை அதிகாரியோ இது வரை தண்டிக்கப்படவில்லை.

கறுப்பின மக்கள் மீது மட்டுமல்ல; நிறவெறியும் இனப்பாகுபாடும் வெள்ளையர் அல்லாத பிற இனத்தவர் மீதும் ஏவப்பட்டு வருகிறது. சில மாதங்களுக்கு முன்பு பிராட்போர்டு நகரில் போலீசின் இன அடக்குமுறைக்கு எதிராக ஆசிய இனத்தவர் கிளர்ச்சியில் இறங்கினர். தற்போது பிரிக்ஸ்டனில் நடந்திருப்பது இன அடக்குமுறைக்கு எதிரான கிளர்ச்சி மட்டுமல்ல; அது ஏதுமற்றோரின் - ஒடுக்கப்படும் வர்க்கத்தினரின் கிளர்ச்சி; பட்டினிப் பட்டாளத்தின் கிளர்ச்சி. ஏகாதிபத்திய உலகின் ஜனநாயக முகத்திரையை கிழித்து, அதன் கோர முகத்தை இக்கிளர்ச்சி அம்பலப்படுத்திக் காட்டி விட்டது.

படிப்பகம்

www.padippakam.com

## தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு:
# கிறித்துவ மதத்திலும் சாதி

தலித் கிறித்தவர்களுக்கான இட ஒதுக்கீடு கோரிக்கை அநேகமாக நிறைவேறிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்த பொதுத் தேர்தல்களுக்கு இன்னமும் ஆறு மாதங்கள் கூட இல்லாத நிலையில் இந்துமத வெறி பாசிசப் பரிவாரங்களைத் தவிர, அநேகமாக எல்லா அரசியல் கட்சிகளும் தலித் கிறித்தவர்களுக்கான இட ஒதுக்கீட்டை ஆதரிப்பதில் வியப்பில்லை. இதற்குச் சட்ட வடிவம், கொடுத்து அமலாக்குவதெனத் தீர்மானித்திருப்பதாக மத்திய அமைச்சர்களும் அறிவித்துவிட்டனர்.

ஆனால் இது வெகு சுலபமாகவோ, தானாகவோ நிறைவேறிவிடவில்லை. நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது; இறுதியாகப் பல்வேறு கிறித்துவ சமூக, மத அமைப்புகளும், தன்னார்வக் குழுக்களும் வீதிக்கு வந்து, ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், கருத்தரங்குகள், பிரார்த்தனைகள் நடத்திய பின்னரே அதிகார பீடத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (இந்துமதவெறிப் பரிவாரங்கள்) தலித் கிறித்துவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதை எதிர்ப்பது எதிர்பார்க்கக் கூடியதுதான்; என்றாலும் இதற்காகப் போராடுவேன் என்று அறிவித்த கருணாநிதி உட்பட, ''இடஒதுக்கீடு - வகுப்புரிமை''க் கொள்கையில் நம்பிக்கை பாராட்டும் எந்த அரசியல் இயக்கங்களும் இவ்வளவு காலமும் எதுவும் செய்யவில்லை என்பதே உண்மை.

''இந்து'' தலித்துக்களைப் போலவே, மதம் மாறிய எல்லாத் தலித்துக்களும் ''இட ஒதுக்கீடு'' போன்றவற்றுக்கு உரிமை உடையவர்கள் தாம். ஆனால், இந்து மதவெறிப் பாசிசப் பரிவாரங்கள் தவிர அனைத்துப் பிரிவினரும் ஏற்றுக்கொண்டு விட்டனர்; அரசும் ஏறக்குறைய நிறைவேற்றிடும்; ஆகவே இது முடிந்துபோன பிரச்சினைதான் என்று ஒதுக்கிவிட முடியாது. இட ஒதுக்கீடு ''இந்து தலித்துக்களைப் போலவே, கிறித்துவத் தலித்துக்களுக்கும் அவர்களது சமூக, பண்பாடு, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை தீர்க்காது என்பதற்காக இப்படிச் செய்யவில்லை. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத்தான் ஒரு பிரிவு தலித் மக்கள் மதம் மாறினர். ஆனால் மதம் மாறியும் அவர்களது பிரச்சினை எதுவும் தீரவில்லை. ''இந்து தலித்துக்களை''ப் போலவேதான் அவர்களும் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர் என்ற உண்மையை இந்த விவகாரம் மீண்டும் நிரூபித்துவிட்டது.

இப்படிச் சொல்வதும், மதமாற்றங்களுக்கு எதிராக இந்து மதவெறிப் பாசிச பரிவாரங்களின் வாதமும் ஒன்றல்ல. அடிப்படையிலேயே வேறுவேறானவை. தாழ்த்தப்பட்டவர்களாகிய பஞ்சமர்கள் - தலித்துக்கள், இந்து மதத்தவர்கள் என்று சனாதனிகளால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் அல்லர். இந்து மதத்துக்கு அப்பாற்பட்டவர்களாகவே வைத்து இழிவுபடுத்தப்பட்டவர்கள். ''நான் இந்து மதத்தவன் என்று சொல்லிக் கொள்ளும் வகையில் ஆன்மாவே செத்துப்போன தீண்டத்தகாதவன் யார் இருக்க முடியும். இந்து மதத்தில் சுயமரியாதைக்கு இடமில்லை; வேறொரு உன்னதமான மதத்துக்கு மாறுவதை நியாயப்படுத்தும் பலமான அடித்தளமாக விளங்குவது தீண்டத்தகாதவனின் மான-மரியாதைதான்'' என்று கூறி புத்த மதத்தில் சேர்ந்தார் அம்பேத்கர். இந்து மதத்துக்கு எதிரான அவரது நிலைப்பாடுகள் சரிதான்; ஆனால் அரசியல் புரட்சியின்றி, மத மாற்றத்தினாலோ, அவரது இன்னொரு தீர்வான இட ஒதுக்கீட்டினாலோ தாழ்த்தப்பட்டவர்களின் மீதான சமூக ஒடுக்குமுறை தீராது என்பதை நெல்லை சாதிக் கலவரங்களும், கிறித்தவ தலித்துக்களின் இந்தக் கோரிக்கையும் காட்டுகின்றன.

அம்பேத்கர் காட்டிய வழியின் அடிப்படையில்தான் அவருக்கு முன்னரே தாழ்த்தப்பட்ட மக்களில் பலரும் மதச் சமத்துவத்தையும், சகிப்புத் தன்மையும் கொண்ட மாற்று நிறுவனமாகக் கிறித்தவத்தைத் தழுவினர். ஆனால் அவர்கள் நடைமுறை அனுபவங்கள் காட்டியதென்ன? தீண்டத்தகாதவர்கள் என்ற சமூக இழிவும் தீரவில்லை; கிறித்தவக் கோட்பாடுகள் படியும் நடத்தப்படவில்லை. தீண்டாமை போன்ற மேல்சாதி ஒடுக்குமுறையும் கிறித்துவ நிறுவன ஆதிக்கமும் சேர்ந்து கொண்டதுதான் கண்ட பலன்.

இன்றும்கூட கிறித்தவர் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களிலும், தலித் கிறித்தவர்களுக்குத் தனிக் காலனிகள், கிணறுகள், கல்லறைகள்தாம் உள்ளன. பல கிறித்துவ ஆலயங்களிலேயே தனியிடத்தில் தொழுகை நடத்தும்படி நிர்பந்திக்கப்படுகிறார்கள். தொழுகைகளின் போதும், விழாக்களின் போதும், பாதிரிமார்களுக்குத் துணையான பணிகள் செய்யவும், ஆலயக் கலைக் குழுக்களில் பங்கேற்கவும் உரிமை மறுக்கப்படுகிறது. மத அமைப்புகளிலும், அவை சார்ந்த கல்வி போன்ற ''சமூக சேவை'' அமைப்பு

இட ஒதுக்கீடு கேட்டுப் போராடும் தலித் கிறித்தவர்கள்




படிப்பகம்

www.padippakam.com

களிலும் மேல் சாதி கிறித்தவர்களுக்கே பதவிகள் அளிக்கப்படுகின்றன. மணஉறவுகளில் இருந்து மேல் சாதியினரால் ஒதுக்கப்படுகின்றனர்; அதாவது மேல் சாதி கிறித்தவர்கள் தமக்குள் இந்து மத இரத்த உறவுடையவர்களுக்குள்ளாகவே மணம் முடித்துக் கொள்ளுகின்றனர்.

''ஜெசூட்'' கல்விக்கான பாதிரியார்கள் சபையின் ஆய்வுப்படி தலித் கிறித்தவர்களில் 79.6 சதவீதத்தினர் நிலமற்ற கூலி விவசாயிகள்; அவர்களுடைய சராசரி ஆண்டு வருமானமே 903 ரூபாய் தான். கல்லாமையோ 65 சதவீதம். தமிழ்நாட்டில் உள்ள கத்தோலிக்கக் கிறித்தவர்களில் 70 சதவீதத்தினர் தலித்துகள் என்றாலும் அவர்களில் ஒரே ஒருவர்தான் பிஷப்பாக ஏற்றுக் கொள்ளப் பட்டார்; பாதிரிமார்களில் நூற்றுக்கு நால்வர் கூட தலித்துக்கள் கிடையாது.

> தீண்டாமை போன்ற மேல்சாதி ஒடுக்குமுறையும் கிறித்துவ நிறுவன ஆதிக்கமும் சேர்ந்து கொண்டதுதான் மதம் மாறிய தலித் கிறித்துவர்கள் கண்ட பலன்.

''கிறித்தவ மதத்திற்கு மாறிய அட்டவணைச்சாதிகள் சமூக ரீதியில் பின் தங்கியவர்களாகவே நடைமுறையில் நடத்தப்படுகின்றனர் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்'' என்றது 1965-இல் கேரள அரசு நியமித்த குமரப்பிள்ளை கமிசன். ''இந்திய அட்டவணை சாதிகளிடையே மறுமலர்ச்சியைத் தூண்டும் அதே உணர்வு கிறித்தவர்களிடையே பரவவில்லை. அட்டவனை சாதிகளுக்கான இடஒதுக்கீடு உள்ளதைப் போல, வேலை வாய்ப்புகள் இல்லாததால் மேல் படிப்புக்குச் செல்வதற்கான தூண்டுதல் மதம் மாறியவர்களுக்கும் இல்லாமல் போனது'' என்று 1973 சட்டநாதன் கமிசன் அறிக்கை கூறுகிறது.

''சாதி அமைப்பு முறையின் தன்மையும் அரிசன கிறித்தவர்களின் பொருளாதார நிலையையும் வைத்து மதிப்பிடும் போது கிறித்தவர்களிடையே பரவலான அளவில் சாதியம் பாராட்டப்படுகிறது. அவர்கள் அநேகமாக வறுமையில் வாடுபவர்களாக உள்ளார்கள் என்பது தெளிவு'' என்று 1975 சிதம்பரம் அறிக்கை உறுதி செய்கிறது. ''இந்து அல்லாத சமூகங்களிடையே இந்து சமூகங்களைப் போலவே சமூக மற்றும் கல்வி ரீதியில் பின் தங்கிய நிலைமை ஏறக்குறைய நீடிக்கிறது. உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் இந்து அல்லாத சமூகங்களில் சாதியம் தொடர்ந்து நீடித்தலையும் தூண்டுதலையும் பெறுகிறது'' என்றது மண்டல் கமிஷன்.

இருந்தபோதும், மதத்தை முன்னிறுத்தி தலித் கிறித்தவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டே வந்திருக்கிறது. அட்டவணைச் சாதிகளை வரையறுக்கும் 1950 அரசுத் தலைவர் ஆணைப்படி, ''இந்து மதத்தில் இருந்து வேறுபட்ட ஒரு மதத்தைச் சேர்ந்த எந்தவொரு நபரும் அட்டவணைச் சாதி உறுப்பினராகக் கருதமுடியாது'' என்றானது. ஆனால் அரசியல் நிர்பந்தங்கள் காரணமாக 1956-இல் சீக்கியத் தலித்துக்களும், 1990-இல் புதிய பௌத்தர்களும் இட ஒதுக்கீடு பெற்றனர். புதிய பௌத்தர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கிய மண்டல் நாயகர் வி.பி.சிங் அரசாங்கம்கூட தலித் கிறித்தவர்களுக்கு அந்த உரிமையினை வழங்கவில்லை.

சமூக இழிவு நீங்க மதமாற்றத்தைத் தீர்வாகக் காட்டிய அம்பேத்கர் கூடப் பின்னாளில் ''மதமாற்றம் அப்படி மாறிய தீண்டத்தகாதவர்களின் சமூக தகுதிநிலையில் எந்த மாற்றத்தையும் கொண்டு வந்துவிடவில்லை'' என்று ஒப்புக் கொண்டார். எவ்வாறாயினும் இடஒதுக்கீட்டிற்கு சமூகம் மற்றும் கல்விரீதியில் பின் தங்கிய நிலையை அடிப்படையாக வைத்துவிட்டு, மதத்தைக் காரணம் காட்டி தலித் கிறித்தவர்களுக்கு இட ஒதுக்கீட்டு உரிமையினை மறுத்து வருவது இந்து மதவாதக் கண்ணோட்டம்தான். ஏற்கனவே சமூகம், கல்வி, பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்ட தலித் கிறித்தவர்கள் ''வெளியிலிருந்து'' இந்து மதத்தாலும், ''உள்ளிருந்து'' கிறித்தவ மத மேல்சாதிகளாலும் ஒடுக்கப்படுவதால் நான்காவதாக மத ஒடுக்குமுறையையும் சுமக்கின்றனர் என்பதே உண்மை.

● ஆர். கே.

5-ம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பு முழுவதும் இயங்கும் தன்மையே மக்கள் விரோதமானதாகவும் கேடுகெட்டதாகவும் இருப்பதைக் காட்டுகிறது. இதுவே ஒரு குறிப்பிட்ட ஹவாலாக் கும்பல், ஒரு நான்காண்டுகளில் சில முக்கிய அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்குப் பணம் பட்டுவடா செய்ததைக் குறித்த ஒரு வழக்குத்தான்; இன்னும் நாட்டிலுள்ள பல ஹவாலாக் கும்பல்கள், இவ்வளவு காலமும், எல்லா மட்டங்களிலும் உள்ள முக்கியப் புள்ளிகள் சம்பந்தப்பட்ட விவகாரம் எப்படிபட்டதாக இருக்கும்?

அவ்வளவு தூரம் போய்விடக் கூடாது என்பதற்காக, ஊழல் தடுப்பு கிரிமினல் சட்டத்தின் கீழ் மட்டுமே வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. கூடுமானவரை ஹவாலாப் பணம் கொடுத்தவர்கள் - பெற்றவர்களுக்கிடையிலான விவகாரமாக எல்லாவற்றையும் சுருக்கிவிட சி.பி.ஐ. எத்தணிக்கிறது. என்ன நோக்கத்துக்காக, எந்த மூலத்திலிருந்து பணம் பெற்றுக் கை மாறியது என்கிற கோணத்துக்குள் போக மறுக்கிறது. இந்தக் கோணத்தையே மூடி மறைக்க எத்தணிக்கிறது. ஹவாலாக் கும்பலின் வாக்குமூலத்தின்படியாலும் என்னென்ன ஒப்பந்தங்களுக்காக இலஞ்சம் தரப்பட்டது, அதனால் திட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் போன்ற விவகாரங்களுக்குள்ளும் சி.பி.ஐ. போக மறுக்கிறது.

இவற்றைவிட முக்கியமான விவகாரங்களும் உள்ளன. உச்சநீதி மன்றத்தில் பொதுநல வழக்குத் தொடுத்துள்ளவர்கள் சில கேள்விகளை எழுப்பியுள்ளனர். பம்பாய் குண்டு வெடிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர் இது ஹவாலாப் பணத்தின் மூலமாக இருக்கிறார்கள்; இதே மூலத்தில் இருந்து ''காஷ்மீர், பஞ்சாப் தீவிரவாதிகளுக்கும்'', இதே வழியில் நிதியளிக்கப்பட்டு வந்திருக்கிறது; குறிப்பாக பாகிஸ்தான் உளவுத் துறை முகவர் எனப்படும் தாரிக் ரஷீத் பாய் மற்றும் துபாயில் வாழும் பம்பாய் மாஃபியா கும்பல் தலைவன் தாவூத் இப்ராகீம் ஆகியோர் இந்த விவகாரத்தின் மூலகர்த்தாவாக உள்ளனர். எடுத்ததற்கெல்லாம் பாகிஸ்தானைக் குற்றஞ்சாட்டும் தேசியக் கட்சிகளின், குறிப்பாக பாரதிய ஜனதாவின் நிதிமூலமாக இவர்கள் உள்ளனர். இவர்களின் தேசிய முகமூடி கிழிந்து கோர முகம் அப்பட்டமாகத் தெரிகிறது.

● மணவாளன்

www.padippakam.com

# சர்க்கரை ஏற்றுமதி! சாணி இறக்குமதி!

*டச்சு விவசாயிகள் ஒரு விசித்திரமான பிரச்சினையை எதிர்கொண்டார்கள் - அது சாணம் பற்றிய பிரச்சினை. இந்தியாவில் அதைக் கொட்டுவதற்கான வழியையும் கண்டுபிடித்தார்கள். டச்சு சாணத்துக்கு இந்தியாவில் நல்ல சந்தை இருப்பதாக இதைப் பொருளாகுமா? அல்லது மூன்றாம் உலக நாடுகள் மீது கழிவுகளையும் குப்பைகளையும் கொட்டிவிடுகின்ற ஏகாதிபத்தியங்களின் புதுப்பிக்கப்பட்ட ஒரு சாண்டல் வடிவமா?*

டச்சு நாட்டின் பண்ணை விவசாயிகளுக்கு ஒரு பெரிய பிரச்சினை. டச்சு (ஹாலந்து) நாட்டின் அளவை ஒப்பிடும் போது கோழிகள், பன்றிகள், பசுக்கள் முதலான கால்நடைகளின் எண்ணிக்கை மிகப் பெரியது. அவற்றின் கழிவுகளும் சாணமும் அந்நாட்டின் சுற்றுச்சூழலைப் பாதிக்கும் கடுமையான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

டச்சு நாட்டில் பாலுக்காகவும் இறைச்சிக்காகவும் பசுக்களுக்கும் பன்றிகளுக்கும் பெருமளவில் தீனிபோட்டு வளர்க்கும் ஏகாதிபத்திய பாணியிலான கால்நடை வளர்ப்பு முறை உள்ளது. பிரேசில், இந்தியா, தாய்லாந்து முதலான நாடுகளிலிருந்து கால்நடைகளுக்கான தீவனங்களை இறக்குமதி செய்தும், டச்சு நாட்டிலேயே தீவிர தீவன உற்பத்தியைப் பெருக்கியும் கால்நடைகளைக் கொழுக்க வைக்கின்றனர். இதன் விளைவாக, அந்நாட்டில் கால்நடைகளில் கழிவும் சாணமும் பெருமளவு குவிந்துள்ளது. ஏறத்தாழ ஒன்றரை முதல் இரண்டு கோடி டன் அளவுக்கு மலை போல் சாணம் குவிந்து கிடக்கிறது.

வழக்கத்துக்கு மாறான, இத்தகைய மிதமிஞ்சிய கழிவுக்கு டச்சு பண்ணை விவசாயிகள் இப்போது ஒரு வழியைக் கண்டு பிடித்துவிட்டதாகத் தெரிகிறது. அந்நாட்டின் ''சீ சுவான்'' எனும் சிறிய நிறுவனம் இந்தச் சாணக் கழிவுகளை அகற்றுவதற்கு முன்வந்துள்ளது. 1000 கிலோ சாணியை ஏறத்தாழ ரூ. 300-க்கு (டச்சு நாணயப்படி 20 கில்டருக்கு) வாங்கி, அதை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து, இந்தியாவில் அதைப் பதப்படுத்தி மாற்றங்கள் செய்து பின்னர் அதை வர்த்தக ரீதியாக விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. டச்சுக் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு மிதமிஞ்சிக் குவிந்துள்ள சாணம் ஒரு பிரச்சினையாக இருப்பதால், இத்தகைய வடிகால்களை எப்பாடுபட்டேனும் நிறுவுவது அவர்களுக்கு அவசியமாக உள்ளது. அரசியல் நிர்பந்தங்கள் மூலம் இந்த வழியை அதிகபட்சம் பயன்படுத்த அவர்கள் கூடுதல் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இத்தகைய வழக்கத்துக்கு மாறான ஏற்றுமதியால் ஏற்படும் சாதக - பாதக விளைவுகள் என்ன?

இந்தத் திட்டத்தை ஆதரிக்கும் சிலர், இந்தச் சாணம் நிலத்திற்கு வளமானது; அதில் அத்தியாவசியமான தாதுப்பொருட்களும் உயிர்மச் சத்தும் உள்ளதாக வாதிடுகின்றனர். இரசாயன உரத்திற்கு இணையாக சந்தையில் போட்டியிடும் அளவுக்கு தரத்தில் உயர்வானது என்கின்றனர். இந்திய விவசாயிகள் தாங்கள் பயன்படுத்தும் ரசாயன உரத்திற்கு மாற்றாக பகுதியளவில் இத்தகைய ஏற்றுமதி செய்யப்படும் சாண உரத்தை நிச்சயம் பயன்படுத்துவர் என்று கூறுகின்றனர்.

இத்தகைய சாண ஏற்றுமதி மூலம் டச்சு நாட்டின் பொருளாதாரம் வளம்பெறும். சாணத்தை லாபகரமான விலைக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம், டச்சுப் பண்ணையாளர்கள் தங்களது தலையாயப் பிரச்சினையான பெருகிவரும் சாணக் குவிப்பிலிருந்து விடுதலை பெறமுடியும்.

ஹான்ஸ் பிரின்ஸ் என்பவ் ''சீ சுவான்'' நிறுவனத்தின் இயக்குனராவார். ''இலாபம் கிடைப்பது மட்டுமல்ல; முக்கியமாக டச்சு நாட்டின் சுற்றுச் சூழல் பாதிப்பு பெருமளவில் குறையும்'' என்று அவர் மகிழ்ச்சியுடன் வாதிடுகிறார்.

ஆனால், டச்சு சுற்றுச்சூழல் குழுவினர் அவநம்பிக்கையுடன் இதைப் பார்க்கின்றனர். கால்நடைகளை வளர்க்கும் முறை, அவற்றைப் பராமரிக்கும் முறை, பண்ணைகள் தங்களது மூலாதாரங்களைப் பயன்படுத்தும் முறை ஆகியவை குறித்து கவலை தெரிவிக்கிறார்கள். வளர்ப்பும் உற்பத்தியும் என்கிற அடிப்படையில், குறிப்பாக 'பால் மற்றும் இறைச்சிக்கான தொழில்' என்கிற முறையிலேயே அதிக கவனம் செலுத்துவது, பெருமளவில் இதில் மூலதனத்தைக் குவிப்பது எனும் நடப்பிலுள்ள இத்தகைய பண்ணை விவசாய உற்பத்தி முறை சிறிதும் ஏற்கக் கூடியதோ, சகித்துக் கொள்ளக் கூடியதோ அல்ல என்கிறார்கள்.

மேலும், டச்சு நாட்டின் கால்நடைகளால் ஏற்படுகின்ற அடிப்படைப் பிரச்சினைக்கு சாண ஏற்றுமதி ஒரு போதும் தீர்வாகிவிடாது. சாண ஏற்றுமதியை சாக்காக காட்டி, பண்ணையாளர்கள் மேலும் அதிகமாக கால்நடைகளைப் பெருக்கவே செய்வர். இதன் விளைவாக மேலும் சாணம் குவிந்து பிரச்சினையை அதிகரிக்கவே செய்யும்.

இந்த விவகாரத்தில் நாம் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். டச்சுப் பண்ணையாளர்கள் பாலும் இறைச்சியும் உற்பத்தி செய்வதற்கு, தாய்லாந்து, பிரேசில் நாட்டு விவசாயிகள் ''டாமியோகா'' என்கிற வெள்ளைக் கிழங்கையும் சோயா பீன்சையும் உற்பத்தி செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அதேபோல், இந்திய விவசாயிகள் நிலக்கடலையும் (புண்ணாக்கிற்காக), பருத்தியும் (பருத்திக் கொட்டைக்காக) ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யுமாறு நிர்பந்திக்கப்படுகிறார்கள். இத்தகைய இருதரப்பு பேரத்தில் டச்சுப் பண்ணையாளர்களும் தங்கள் பங்குக்கு விற்கிறார்கள் - சாணத்தை!

இந்த விசித்திரமான பேரத்தில் உள்ள வேறு பல முக்கிய அம்சங்களையும் கவனமாகப் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சாணத்திலுள்ள மாசுத்தன்மையின் தாக்கம் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும். இந்தச் சாணத்தில் எல்லா வகையான ரசாயனப் பொருட்களும் அடங்கியுள்ளன. பாஸ்பேட்டு, பொட்டாசியம், நைட்ரஜன் போன்ற கனசர உலோகங்கள் அபாயம் விளைவிக்கக்கூடும். செம்பு இச்சாணக் கழிவில் கூடுதலாக உள்ளது. சிறிய அளவில் இருந்தாலும், நிலத்தைப் பாதிக்கக் கூடிய நச்சுக் கொல்லிகளும் இதில் உள்ளது. கால்நடைகளால் செரிக்கப்படாத சிறு விதைகளும் இதில் கலந்துள்ளது. இம்மாசுகளை எரிவாயு தயாரிப்புக்கான உலையில் இட்டு உயிரியல் நொதித்தல் முறையில் கட்டுப்படுத்த முடியும் என்று டச்சுத் தரப்பினர் வாதிடுகின்றனர்.

ஆனால் பிரச்சினை இதுவல்ல. மாசு பற்றிய விவாதம் மக்களிடையே உணர்ச்சிபூர்வமான உறுதியான ஆதரவை உருவாக்கக்கூடும். இருந்தாலும் இது சில புள்ளி விபரங்களைக் காட்டி சுலபமாக வீழ்த்தப்படவும் வாய்ப்புள்ளது. இந்த 'விபரங்கள்' மிக முக்கிய அம்சமாக இல்லாத போதிலும்கூட அவற்றையே பிரபலப்படுத்துவர். எத்தனையோ சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பற்றிய விவாதங்கள் நசுக்கப்பட்டதை நாம் பலமுறை பார்த்ததில்லையா?

இந்தியப் பத்திரிகைகள் குறிப்பிடுவது போல, இறக்குமதியாகும் டச்சுச் சாணத்தில் உள்ளவை வெறும் மாட்டுச் சாணம் மட்டுமல்ல; பிரதானமாக பன்றிச் சாணமும் கோழிச் சாணமும் அதற்கடுத்த நிலையில்தான் மாட்டுச் சாணமும் உள்ளன. இது டச்சு நாட்டின் இறைச்சித் தொழிலின் பூதாகரமான வளர்ச்சியின்



படிப்பகம்

www.padippakam.com

எதிர் விளைவாகும்.

டச்சு நாட்டின் கால்நடை வளர்ப்பும் பராமரிப்பு முறையும் சராசரி ஒருவரின் கற்பனைக்கே எட்டாதது. நூற்றுக்கணக்கான கால்நடைகள் சிறிய தொழுவத்தில் திணிக்கப்படுகின்றன. அவை தொழுவத்தில் அசையவோ, வெளியே மேய்ச்சலுக்குச் செல்லவோ முடியாது. தின்று கொழுத்து வீங்கத்தான் முடியும். இதே போல் கோழிப் பண்ணைகளில், கோழிகளின் அலகுகளும் இறக்கைகளும் வெட்டப்படுகின்றன. போதிய இடவசதியில்லாத நெருக்கம் காரணமாக கோழிகள் ஒன்றோடொன்று சண்டையிட்டு குத்திக் கிழித்து சாகடித்துவிடும் என்பதாலேயே இந்த ஏற்பாடு. நெருக்கமான, இருண்ட கொட்டடியில்தான் அவை பெரும்பாலும் வாழ்கின்றன. டச்சுப் பண்ணையாளர்களுக்கு கால்நடைகள் எப்படி வதைக்கப்பட்டாலும் கவலையில்லை. அவர்களுக்கு இறைச்சியும் லாபமும்தான் முக்கியம்.

முதலாம் உலக நாடுகளின் 'பெருமை மிகு' உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோருக்காக - கால்நடைகள் சாகும் வரை சுரண்டுகிற அப்பட்டமான மேற்கத்திய முறையின் ஒரு பகுதிதான் இந்தச் சாண ஏற்றுமதி.



இந்தியாவின் மேற்குப் பகுதியிலுள்ள குஜராத்தில் கால்நடை வளர்ப்பு என்பது புனிதமான தொழிலாகக் கருதப்படுகிறது. விவசாயிகளோ கால்நடைகள் மீது அன்பும் பாசமும் கொண்டவர்கள். டச்சு நாட்டை ஒப்பிடும்போது இந்தியக் கால்நடைகளின் வாழ்நிலை பலமடங்கு உயர்வானது. இந்த மாநிலத்தில்தான், மிகப்பெரும் லாபத்திற்காக மிகக் கொடூரமாக கால்நடைகளை வதைக்கும் தொழிலிலிருந்து வரும் கழிவுகள் கொட்டப்படுகிறது.

எந்த சுரண்டல் வலைப்பின்னல் நீடிக்கிறதோ, அதிலிருந்தே ஒரு புதிய வியாபார உத்தி மேற்கொள்ளப்படுகிறது. டச்சு சாண ஏற்றுமதி என்பது மிகப் பெரிய ஏகாதிபத்திய சுரண்டல் முறையின் ஒரு சிறு அங்கம்தான். சுரண்டலை புதிய வடிவில் தொடர்வதற்கான முயற்சியாகவே இது மேற்கொள்ளப்படுகிறது.

தாய்லாந்து, பிரேசில், இந்தியா மற்றும் பிற மூன்றாம் உலக நாடுகளின் விவசாயிகள் பணப்பயிர்களை உற்பத்தி செய்து அவற்றை டச்சு நாட்டுக்கு மிகக் குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அதை டச்சுக்காரர்கள், பெருவீத தொழிற்சாலை போல அமைந்துள்ள தமது கால்நடைப் பண்ணைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஒரு ஏக்கரில் கால்நடைப் பண்ணை வைத்துள்ள டச்சுக்காரருக்கு, அவருடைய நாட்டுக்கு வெளியே 7 ஏக்கர் நிலத்தில் தீவன வளர்ப்பு தேவைப்படுவதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

இறைச்சி, பால், முட்டை முதலானவற்றை எந்த அளவுக்கு பெருக்குகிறார்களோ, அந்த அளவுக்கு கால்நடைகளின் பராமரிப்பும், சுகாதாரமும் தேவைப்படுகிறது. கால்நடைகள் சுகாதாரமான சூழ்நிலையில் ஆரோக்கியமாக இருந்தால்தான் மேலும் சுரண்ட முடியும். இதற்கு மலைபோல் குவியும் கழிவுகளை அகற்ற வேண்டும். இந்த வலைப்பின்னலானது அதிகபட்ச சுரண்டலும், சுற்றுச்சூழல் மாசுபடுவதும் ஆகும். இது அடிப்படையிலேயே ஏற்றுக் கொள்ளப்பட முடியாத உற்பத்தி முறையாகும்.

**டச்சு சாண ஏற்றுமதி என்பது மிகப்பெரிய ஏகாதிபத்திய சுரண்டல் முறையின் ஒரு சிறு அங்கம் தான். சுரண்டலை புதிய வடிவில் தொடர்வதற்கான முயற்சி.**

இதுவரை, இந்த உற்பத்திமுறையின் வரையறைக்குட்பட்ட ஒரு பிரச்சினையாகத்தான் சாணமும் கழிவுகளும் இருந்தன. ஆனால் இப்போது டச்சு நாடு அதன் கழிவுகளாலேயே மூழ்கிவிடும் நிலையில் உள்ளது. சாண ஏற்றுமதியானது, இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு டச்சுப் பண்ணையாளர்களுக்கு உதவுகிறது. ஆனால் இந்திய விவசாயிகளுக்கு இந்தச் சாணம் இனாமாகத் தரப்படுவது அல்ல; அவர்கள் இதற்குப் பணம் செலுத்த வேண்டும். மிகப் பெரிய கம்பெனிகளின் மிகப் பெரிய லாபத்திற்கான வியாபாரத்தின் ஒரு பகுதிதான் இது.

இந்திய நாட்டில் வசதி படைத்த நிலப்பிரபுக்களும், பணக்கார விவசாயிகளும் மட்டுமே இந்தச் சாணத்தை வாங்க முடியும். பல உரங்களில் ஒன்றாக சாணக் கழிவுகளைப் பயன்படுத்துமளவுக்கு அவர்களிடம்தான் பொருளாதார வசதி - வாய்ப்புகள் உள்ளது. சாண இறக்குமதிக்கு ஈடாக, அவர்கள் பணப்பயிர்களை விளைவித்து டச்சு நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு இந்தச் சாண இறக்குமதியால் எந்தவொரு பலனும் இல்லை. மாறாக, எதிர்மறையான விளைவுகளைத்தான் ஏற்படுத்துகிறது. ஏனெனில் இது, நிலப்பிரபுக்கள் பணக்கார விவசாயிகளின் நிலையை மேலும் உறுதிப்படுத்துவதோடு, சிறு விவசாயிகளுக்கு ஆதாயமற்ற விவசாய உற்பத்தி முறையையே வளர்க்கிறது.

டச்சு சாணத்தை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் ''சீ சுவான்'' நிறுவனத்தின் இயக்குனரான ஹான்ஸ் பிரின்ஸ் ஆகஸ்டு மாதத்தில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளார். குஜராத்தின் கட்ச் வளைகுடாவிலுள்ள மாண்ட்வி துறை முகப்பகுதியில் சாணத்தை இறக்குமதி செய்து பதப்படுத்துவது குறித்து பரிசீலனை செய்ய உள்ளார். அதன் பிறகு, ஆய்வுத் திட்டங்கள் தொடரும்.

இந்த ஆய்வுகளுக்குப் பிறகு சாண ஏற்றுமதி தொடங்கும். அதற்கு முன் சாணப் பதப்படுத்தல் திட்டத்துக்கான அடிப்படை கட்டுமானப் பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதற்கிடையே டச்சு நாட்டிலும் இந்தியாவிலுமுள்ள சுற்றுச்சூழல் வாதிகளும் உழைக்கும் இந்நாசகார திட்டத்தை எதிர்த்துப் போராட தயாராக வேண்டும்.

★

**(சாண ஏற்றுமதி குறித்து டச்சு நாட்டிலிருந்து கிடைத்த தகவல்களைக் கொண்டு சுருக்கமாக இக்கட்டுரை தயாரிக்கப்பட்டுள்ளது. ஆதாரம்: ''தேர்டு வேர்ல்டு ரிசர்ஜன்ஸ்'', இதழ் எண்: 55)**

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Madras - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd., Madras - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



"உழுதவன் கணக்குப் பார்த்தா உழக்கு கூடத் தேறாது" என்பார்கள், அந்தப் பழமொழிக்கு இரக்க சாட்சியாக இருப்பவர், இந்தப் படத்திலுள்ள தங்கவேலு. காவேரியின் கடைமடையான மாயவரம் பகுதியைச் சேர்ந்த விவசாயி. விரித்துக் காட்டும் அவரின் உள்ளங்கையிலுள் இருப்பது இரவல் மூக்குத்தி. அது அடகுகடைக்குப் போன பின்புதான், இவரது வயலில் தண்ணீர் பாயும். காவேரி தண்ணீரல்ல; கிணற்றுத் தண்ணீர். கடன் வாங்கியாவது பெற்ற குழந்தைக்குக் கஞ்சி ஊட்டிவிடும் தாயின் மனது போன்றது, விவசாயி காட்டும் அன்பு தனது பயிரிடம். தங்கவேலுக்கு உதவ உறவினர்கள் இருந்தார்கள்; ஆனால் பலருக்கு? எத்தனை நாள்தான் மளிகைக் கடைக்காரரிடம் தயங்கித் தயங்கிக் கடன் கேட்க முடியும்? பயிரை நட்டு விட்டு, வானத்தையும் காவேரி வாய்க்காலையும் பார்த்து ஏமாறுவதைவிட, ரோட்டுக்குத் தார் ஊற்றுவதும், வீடு கட்ட செங்கல் சுமப்பதும் அரை வயிற்றுக் கஞ்சிக்கு உத்தரவாதமானது. அரைக்காணி நிலம் வைத்திருப்பவனுக்கே இந்த அவலமென்றால், அந்தக் கூலி என்ன செய்வான்? எங்கே போவான்? பட்டணம் அல்லது பட்டினி இரண்டிலும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

ரோம் நகரம் பற்றி எரிந்த போது நீரோ மன்னன் பிடில் வாசித்தது கடந்த கால வரலாறல்ல என்பதற்கு இந்தப் படமே சாட்சி. பண்ணையார் மூப்பனார், பார்ப்பனப் பண்டாரம் சங்கராச்சாரிகளோடு, பார்ப்பன இசை வித்வான்கள் திருவையாற்றில் கூடி கும்மாளமிட்ட காட்சியிது. காவேரியில் தண்ணீர் இன்றி தஞ்சை விவசாயிகள் வாழ்வா, சாவா எனப் போராடுகையில் செத்துப் போன தியாகய்யரின் நினைவாக ஏழுநாள் தொடர்ந்து பாட்டுப்பாடி மகிழ்ந்தது இக்கும்பல். இதுவா மனித நாகரிகம்? இல்லை குமட்டல் எடுக்கும் வக்கிரம். திருவையாற்றில் இதே மேடையில் இந்தப் பார்ப்பனக் கும்பல் பலமுறை தனது சாதித் திமிரைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இன்றோ தமிழகத்தில் இருந்து துரத்தியடிக்கப்பட வேண்டிய துரோகக் கும்பலாய் தன்னை இனங்காட்டிக் கொண்டுவிட்டது.

காலங்காலமாக தமிழகத்திற்கு உணவு படைத்துவரும் தஞ்சை விவசாயிகள் ஒருபுறம்; தமிழிசையைத் திருடி உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்த தியாகய்யரின் வழிவந்த பார்ப்பனக் கும்பலும் அவர்களது துதிபாடிகளும் மறுபுறம். காவேரி நீரில் நமது உரிமைக்குப் போராடும் தஞ்சை விவசாயிகளுக்குத் தோள் கொடுக்கப் போகிறோமா? இல்லை இந்தத் துரோகக் கும்பலுடன் கூடி கும்மாளமடிக்கப் போகிறோமா?

